# செந்தமிழ்

தொகுதி 88 மார்ச் 94 பகுதி 1

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ.,பி.எல்.

**மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.**

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்
நா. பாலுசாமி எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்.டி ,பி.எட்.

## பொருளடக்கம்

பக்கம்

1. சண்டேசுவரர்
பேரறிஞர் அ. மா. பரிமணம் 1

2. பாவேந்தரின் உரை நடைத் திறம்
பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை 16

3. வள்ளுவர் வழங்கும் மேலாண்மைக் கோட்பாடுகள்
க. சி. அகமுடைநம்பி, பி.இ., எம்.ஏ., 21

4. இலக்கியத்தில் சிந்தனை ஒற்றுமை
பேரறிஞர் செ. வை. சண்முகம் 31

5. திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்த்து
இராசகுமார் காசிநாததுரை 39

# I சண்டேசுவரர்

## பேறிஞர் அ.மா. பரிமணம்

இறையுணர்வுடைய, குறிப்பாகச் சைவ சமய உணர்வு மிக்க ஓர் அன்பர் கன்னியாகுமரி முதல் காசுமீரம் வரையிலான சிவாலய வழிபாடு செய்து வரச் செல்வாராயின், பெரியனவும் சிறியனவுமான எண்ணற்ற திருக்கோயில்களைக் காணமுடியும். அவற்றின் கருவறைகளில் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப் பெறும் மொழி ஒன்றுயினும், ஆலய அமைப்பு, திருமூர்த்த வடிவமைப்பு, வழிபாட்டு நடைமுறைகள் போன்றவற்றில் பலவேறுபாடுகள் விளங்குவதையும் காணக் கூடும். விமான அமைப்பின் வேறு பாட்டினைக் கொண்டு, கட்டடக் கலை வல்லுநர்கள் அவற்றைத் திராவிட, வேசர, நாகர அமைப்புடையவை எனப்பிரித்துக் காட்டுவர். தென்னுட்டுத் திருக்கோயில்கள், வடமொழியில் அமைந்துள்ள ஆகமங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருப் பதும், வடநாட்டிலுள்ள திருக்கோயில்கள் அந்த ஆகமங்களைப் பின்பற்றுமல் அமைக்கப்பட்டிருப்பதும் இதற்குக் காரணமாகும். பொதுவாகத் தென்னகக் கோயில்களில், பூஜைசெய்தற் குரியாரன்றிப் பிறர் எவரும் கருவறைக்குள் செல்ல அனுமதிக்கப் படாமைக்கும், வடஇந்தியக்கோயில்களில் காலப்பூசை நேரங்கள் தவிரப் பிற நேரங்களில் வழிபாட்டிற்குச் செல்வோர் தாமே பூவும் புனலும் இட்டு இறைவனைப் பூசிப்பதற்கு அனுமதிக்கப்படு வதற்கும் இதுவே காரணமாகும்.

தமிழகத்தில், சிவனது அருவுருவத் திருமேனியாகிய இலிங்க மூர்த்தம் விளங்கும் கருவறை, அதனை அடுத்துத் திருச்சுற்றுக்கள், அர்த்த-மகாமண்டபங்கள், அம்மைக்கு அமைக்கப்பட்ட சந்நிதி, கருவறையின் முன்னே நந்தி, பலிபீடம், கொடிமரம் கொண்ட அமைப்பு, திருச்சுற்றுக்களில் முருகன் பிள்ளையார் போன்றவர்கட் கமைக்கப்பெற்ற திருச்சுற்றுச் சந்நிதிகள், தீர்த்தக்குளம், நெடி துயர்ந்த கோபுரங்கள், விமானம் போல்வன அமைந்த பெரிய சிவாலயங்களும், இங்ஙனமின்றி, கருவறை அம்மை சந்நிதி நந்தி, பீடம், ஒரு திருச்சுற்று ஆகியன மட்டும் கொண்ட சிறிய சிவாலயங் களும் எண்ணற்று விளங்கக் காணலாம். இங்கெல்லாம் வழி பாட் டிற்குச் செல்வோர் கருவறை, அம்பாள் சந்நிதி ஆகியவற்றின் வேருக ஒரு தனிச் சிறுகோயில் முதல் திருச்சுற்றில் தவருது அமை கப்பட்டிருப்பதனைக் காணலாம். கருவறை கிழக்கு நோக்கியதாக் இருப்பின் இந்தச்சந்நிதி, கருவறையின் வடகிழக்குப் பகுதியில்க

கருவறை அபிடேக நீர் விழும் தீர்த்தத் தொட்டிக்கு அருகில் கருவறையை நோக்கியதாக அமைக்கப்படும். கருவறையும் வியானமும் கொண்ட உயரத்திற்கு ஏற்றவாறு மிகச் சிறிய அளவில் இச்சிறு கோயில் விமானத்தொடு அமைக்கப்பட்டிருக்கும். அதனுள், பெரும்பாலும் அமர்ந்த கோலத்தில் அமைந்துள்ள மூர்த்தியே சண்டேசுவரர் எனப்படுவார்.

சிவன் கோயிலை ஈசுவரன் கோயில் என்றும், திருமால் கோயிலைப் பெருமாள் கோயில் என்றும் பொதுமக்கள் குறிப்பிடும் வழக்கம் இன்றும் உண்டு அப்பெயர்களில் தெருக்களும் அமைந்துள்ளன. சண்டேசுவரரின் பெருமை, அவரை வழிபடுவதன் சிறப்பு. அவ்வழி பாட்டு நுட்பம் போல்வனவற்றை அறியாத மக்கள் பலர், சிவனை வழிபட்டு, வலம் வந்து சண்டேசுவரர் முன் வந்து கை கொட்டி ஒலி எழுப்பித் தங்கள் ஆடைநுனியிலுள்ள நூலின பகுதியை எடுத்து அச்சந்நிதியிலோ, அத் திருமேனி மீதோ இட்டுத் திரும்பியதனைச் சில ஆண்டுகட்கு முன்பு வரை கண்டிருத்தல் கூடும். அவர்கள் சண்டீசுவரரைச் 'செவிட்டுச் சாமி' என்று குறிப்பிடுவர். செவிடாதலின் தம் வருகையைத் தெரிவிக்கக் கையொலி எழுப்புவதையும், சிவன் சொத்து எதையும் எடுத்துச்செல்லவில்லை என்பதனை அறிவிக்கத் தம் ஆடையின் நுனியிலுள்ள நூலினை இட்டு வருகிறோம் என்று கூறுவதையும் கேள்விப்பட்டிருக்கலாம். ஈசுவரன் கோயிலுக்குச் சென்றால் செவிட்டுச் சாமியை மறவாமல் கும்பிடவேண்டும் என்று கூறி வந்ததையும் கேட்டிருக்கலாம். இந்த அறியாமைக்கு அவர்களை மட்டும் குறை கூறுவது ஏற்றதாகாது. சைவவைணவத் திருக்கோயில்களின் வழிபாட்டு முறை, நடைமுறை விளக்கங்கள், சமய அடிப்படை உண்மைகள் பற்றி அம்மக்கட்கு எடுத்துக்கூற-கூறி வழி காட்டக் கூடிய சமயத் தலைவர்களும் சமய நிறுவனங்களும் இல்லாமையும், இருக்கும் தலைவர்களும் நிறுவனங்களும் அப்பணியைச் செய்யாமையும் காரணமாகும். இப்பொழுது, நூலினைப் பிடுங்கியிடுவது போன்ற பழக்கங்கள் மறைந்து வருவது ஆறுதல் அளிப்பதாகவுள்ளது.

சண்டி, சண்டர், சண்டீசர், சண்டேசுரர், சண்டிகேசுவர், சண்டநாதர் என்பன சண்டேசுவரரின் வேறு பெயர்கள் ஆகும். இவற்றுள் எதுவும் அவரது இயற்பெயராகாது. சிவகணத் தலைவர், தொண்டர் நாயகர், சேய்ஞலூர்ப் பிள்ளையார் போன்ற பெயர்களும் காரணப் பெயர்களாக அவரைக் குறிக்க வந்தனவாகும்.

பெருமானுல் இவர் அளிக்கப் பெற்ற பெருமை, பெயர், ஊர்ப் பெயர், செயல் ஆகியவற்றைத் தேவார மூவர்கள், மணிவாசகர் நம்பியாண்டார் நம்பிகள் ஆகிய திருமுறை வள்ளல்கள் குறிப் பிட்டுக் கூறியுள்ள போதிலும் இவரது இயற்பெயர், பெற்ருேர் பெயர், ஊர்ப்பெயர், ஆற்றிய அருஞ்செயல், அடைந்த பெரும் பரிசு போன்றவற்றை விரிவாகவும், விளக்கமாகவும் தமிழில் வழங் கிய பெருமை தெய்வச் சேக்கிழார் அவர்களையே சாரும். பெரிய புராணத்தில், சேக்கிழார் விளக்கியுள்ள அறுபான்மும்மை நாயன் மார்களும் தமிழ் மண்ணில், தமிழகத்தை அடுத்துள்ள பகுதிகளில், வாழ்ந்த பெருமக்களேயாவர். அவர்களுள் ஒருவராய், காவிரி புரக்தும் சோழ நாட்டூர்கள் ஒன்றில், வேதம் வல்ல தமிழ்க்குடும்பம் ஒன்றில் தோன்றித் தம் சிவப்பணியின் உறைப்பால் தமிழகத்தும் பிற சில விடங்களிலுமுள்ள சிவாலயங்களில் தவருது இடம்பெற்று, வழிபடப்பெற்றுவரும் சண்டேசர் சைவஉலகில் தனிச்சிறப்பெய்தி விளங்குவது குறிப்பிடத்தக்கது. மேலும், சிறப்புமிக்க சிவமூர்த் தங்கள் இருபத்தைந்தனுள், ‘சண்டேசானுக் கிரகமூர்த்தி’ எனும் மூர்த்தம் அமைவதற்கு அடிப்படையாக விளங்கிய இவரது பெருமை அளப்பரிதாகும். இப்பெருமையைத் தமிழகத்திற்குரிய தென்பதனை, வடநாட்டுச் சிவாலயங்களில் சண்டேசர் சந்நிதி பெரும்பாலும் அமையாமை கொண்டும் அறியலாம். சண்டேசர் அமைப்பு, வழிபாட்டுமுறை போன்றவற்றைக் காமிகம், காரணம், சுப்பிரபேதம் முதலிய ஆகமங்களும், சிரீ தத்துவ நிதி, விசுவ கர்மீயம் போன்ற வடமொழியிலமைந்த நூல்கள் விரிவாகக் கூறு கின்றன; டி. ஏ. கோபிநாதராவ் அவர்களின் ‘இந்து சமயப் படிமக் கலையியற் கூறுகள்; ‘பிரதிமா கோசம்’ என்னும் படிமவியற் கலைக் களஞ்சியம் போன்ற நூல்கள் ஆங்கிலத்தில் கூறுகின்றன. அண்மை யில், திருவாவடுதுறை ஆதீன வெளியீடாகச் ‘சண்டேசுவரர்’ என்னும் பெயரில் தமிழ் நூல் ஒன்று விரிவாக விளக்கப் படங்களு டன் வெளிவந்துள்ளது. ‘சண்டி’ என்பது தான் தேர்ந்துகொண்ட ஒருவருக்குச் சிவபெருமானுல் அருளப்படும் ஒரு பதமாதலின், அது சண்டேசப் பதம் எனப்படுகிறது. யுகங்கள் தோறும் ஒரு சண்டேசர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஆகமங்கள் குறிப்பிட்டு அவர்களின் அமைப்பையும் கூறுகின்றன. கலியுகம் தவிர்த்து ஏனைய யுகங்கட்குக் கூறப்படும் சண்டேசர்கள் பல கரங்களும், வெவ்வேறு கருவிகளும் கொண்டிருந்தமையினை அந்நூல்கள் உரைக்கின்றன. கலியுகத்துக்குரிய சண்டேசராகச் சேக்கிழார் கூறும் சேய்ஞலூர்ப்

பிள்ளையார் மட்டும் மானுட உருவில் காட்டப்பட்டுள்ளார். இன்று அதனையே எல்லாச் சிவாலயங்களிலும் சண்டேச மூர்த்தியாகக் கல்லிலும் செம்பிலும் வடித்து நிறுவி வணங்குகின்றனர். பிற யுகங்கட்குரியவராகக் கூறப்படும் சண்டேசர்களின் இயற்பெயர், வரலாறு, அவர்கள் அப்பதம் பெறுதற்கான பணி விவரம் போன்ற செய்திகளைத் தமிழ் நூல்களில் அறிதற்காம் வாய்ப்புக் கிடைத்திலது. இது பற்றி வினவப்பெற்ற வடமொழி வாணர்களும் விடை கூறுமாறில்லை.

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகியவற்றில் விளங்கிய சண்டேசுவரர்கள் முறையே பிரசண்டர், விக்ராந்த சண்டர், விபுசண்டர் என்னும் பெயர்களைக் கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் முறையே பதினாறு, எட்டு, நான்கு என்னும் எண்ணிக்கையில் கரங்களையும் அவற்றில் பல்வேறு ஆயுதங்களையும் கொண்டிருந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது கைகள் எண்ணிக்கையில் மாறுபாடும் காணப்படுகிறது. ஆனால், கலியுகத்தில் இருகரங்களோடும் வீரசண்டர் என்னும் பெயரோடும் உள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மானுடராகப் பிறந்த ஒருவர், சிவத்தொண்டால் சண்டேசப்பதம் எய்திய நிலையிலும் இருகரங்களோடு இருந்துள்ளார் என்பது நோக்கத்தக்கது. இவர் அமர்ந்த அல்லது இருந்த நிலையில், கரத்தில் மழுவுடனே, அஞ்சலி நிலையுடனே விளங்குவார். முந்தைய மூன்றுயுகச் சண்டேசர்களும் சினக்குறிப்புடனும் அஞ்சுதகு தோற்றத்துடனும் காட்டப்பெற, சேய்ஞலூர்ப் பிள்ளையாகிய கலியுகச் சண்டர், அமைதி தவழ்முகத்தொடும், சிவபெருமான் திருமுன்பு மரியாதை மிக்க அச்சத்தொடும் விளங்கக் காணலாம். "சண்டேசு என்றால் பாது காப்பே(ா)ன் எனப் பொருள்படும்" என்று ஒருவர் விளக்கம் தந்துள்ளார் அகராதிகளிலும் நிகண்டுகளிலும் காணப்படாத இப்பொருளைச் சண்டேச பதத்தின் இயல்பு நோக்கிக் கூறப்பட்ட கருத்துப் பொருளாகக் கொள்ளலாம். கலியுகம் தவிர்த்த பிறயுகச் சண்டர்களை இக்காலத்திருக்கோயில் திருமேனிகளுள் காண்பதரிது.

ஞானசம்பந்தர் காலத்திற்குப் பிற்பட்டவராகிய ஆதிசங்கரர், சிவன், திருமால், அம்பிகை, கணபதி, முருகன், சூரியன் ஆகியோரைத் தனித்தனி முதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவர்களை இணைத்து ஒன்றுபடுத்தி இந்து மதத்தினை மேலும் வலிவுடையதாக்க எண்ணி, 'அறு சமய இணைப்பு தோற்றுவித்தாக வரலாறு கூறுகின்-

றது. இதில் திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவோர் வைணவர் எனப்பட்டனர். அவர்கள் சிவாகமங்களை உடன்படாமல் தமக்கெனச் சில ஆகமங்களை அமைத்துக் கொண்டனர். அவர்கள் சண்டீசர் பற்றிய கோட்பாட்டினை ஏற்கவில்லை. அவர்களைத் தவிர்த்து ஏனைய ஐந்து பிரிவினர்களும், சிவபெருமானுக்கமைந்த சண்டீச பதத்தின் சிறப்பினை உணர்ந்து தாம் வழிபடும் முதன்மைத் தெய்வங்கட்கும் சண்டீச பத அமைப்பினை அமைத்துக் கொள்-வாராயினர். சிவனுக்கு முன்னரே சண்டீச பதம் அமைக்கப்பட்டமையால் ஏனைய அம்பிகை, கணபதி, முருகன், சூரியன் ஆகிய நான்கு தெய்வ வழிபாட்டினரும் தங்கள் தெய்வங்கட்குத் தனித் தனி சண்டீசர்களை அமைத்துக் கொண்டவற்றையும் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன. அவ்வகையில் சிவாலயங்களில் அமையும் சண்டீசர் தொனிச் சண்டர் என்றும முருகன் ஆலயச் சண்டீசர் என்றும், கணேசன் ஆலயச் சண்டீசர் கும்பசண்டர் என்றும், சூரியன் ஆலயச் சண்டீசர் தேசச் சண்டர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளனர். அம்பிகை ஆலயத்திற்கு இவ்வாறு அமைக்கப்பட்டது சண்டேசுவரி என்றும் தருமநீதி என்றும் வழங்கப்படுகிறது.

வேதத்தில் செல்வாக்கு மிகப்பெற்றுள்ள இந்திரன், சங்க நூல்களில் இடம்பெறும் பலதேவன் போன்றவர்களின் வழிபாடு குறைந்த நிலையில் தமிழகத்தில் அவர்கட்கான தனிக்கோயில்கள் எடுக்கப் பெறும் வழக்கம் இல்லாது மறைந்து போயிற்று. அதனல் அத்தகையோர்க்குத் தனியே சண்டீச பதம் கூறும் நிலை ஆகமங்-களில் காணப்படவில்லை. சிங்கள தேசத்தில் சண்டீச மூர்த்தமும் வழிபாடும் இருந்துள்ளதனைக் குறிப்பிடும் ஆகமம் (உத்தர காமிகம்-26-27.சுலோ) வடநாட்டில் சண்டீசர் பற்றிய குறிப்புக்கள் இன்மை அல்லது உண்மை பற்றிக் குறிப்பிடாதது கருதத்தக்கது. ஆகமங்கள் சண்டீசர் பற்றிக் கூறும் குறிப்புக்களை ஒருங்கு திரட்டி ஆராய்வது, சிவபெருமானுற் படைக்கப்பட்டன என்று கருதப்படும் ஆகமங்களின் காலநிர்ணயத்திற்கு உதவியாக அமைதல் கூடும், நான்முகச் சண்டேசர் திருவுருவம் தாராசுரத்தில் அமைந்துள்ளது என்று காட்டியுள்ளனர். சில கோயில்களில் இரு சண்டீசர் அமைக் கப்பட்டிருப்பதையும், சண்டீசர் தம்சக்தியாகிய தரும நீதியுடன் ஒரு கோயிலில் அமைக்கப்பட்டிருப்பதையும் அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். சிதம்பரத்தில் சண்டேசர் கருவறையில் நான்முகச் சண்டரும், ஒருமுகச் சண்டரும் இடம்பெற்றுள்ளனர், இவ்வமைப்பு,

கோயில் எனப்படும் சிதம்பரத்தின் தொன்மையுணர்த்தும் வகையில் முந்திய யுகத்திற்குரியதாகக் கொள்ளத்தக்க நான்முகச்சண்டி' அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கலாம். திருவாரூர்த் தியாகேசர் கோயிலின் தெற்கு ஆவரணத்தில் விளங்கும் சண்டேசுரர் எமசண்டேசுவர் என்று குறிப்பிடப்படுகின்றார். திருவாரூர்த்தலம் பல்வேறு இலக்கியங்களைக் கொண்டுள்ளமையால், எமசண்டே-சருக்குப் புராண அடிப்படையில் ஒரு விளக்கம் கூறப்பட்டிருக்கும். ''காசியில் இறக்க முத்தி கமலையில் பிறக்க முத்தி'' என்னும் ஒரு மூதுரை உண்டு. திருவாரூரிற் பிறந்தார் அனைவரும் முத்தி எய்துவர் என்பது அதன் கருத்து இயமனுக்கு உரிய உயிர்கவரும் வேலை அங்கு நிகழ்ந்தால், அங்குப் பிறப்போர்க்கு முத்தி எனும் மொழி பொருத்தமற்றதாகும். அந்த நினைவை உறுதிப்படுத்தும் வகையில், அழித்தல் தொழிலுக்குரிய இயமனை, வழிபடவந்தோர்க்குச் சிவ வழிபாட்டுப் பயனை அளிக்கும் தொழிலுக்குரிய சண்டேச பீடத்தில் வைத்துப் போற்றினர் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது தமிழகச் சிவாலயங்கள் அனைத்திலும் சண்டேசுவரர் திருமேனி அமைக்கப்பட்டு வழிபடப்படுகின்றது. அவை தோற்றத்திலும் வடிவ அமைப்பு நிலை போன்றவற்றிலும், சிற்சில வேறுபாடுகள் கொண்டிருப்பினும், ஆகம அடிப்படை கொண்டு, சேய்ஞலூர்ப் பிள்ளையின் சண்டேச மூர்த்தத்தையே குறிப்பனவாக அமைக்கப்-பட்டுள்ளன.

சண்டேசுவரருக்கு ஆலயங்கள் அமைப்பது பற்றி ஆகமங்கள் கூறியுள்ளவற்றை டி.ஏ. கோபிநாதராவ் போன்றவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். வடமொழி ஆகமங்கள் கூறும் அச் செய்திகளை அம்மொழியில் அறிய வியலாத தமிழ் மக்களுக்கும் பிறர்க்கும் அந்நூல்கள் பெரும் பயன் விளைப்பனவாகவுள்ளன. 'சுதந்திர நிலை'யிலும் 'பரதந்திர நிலை'யிலும் சண்டேசர் வழிபடப் பெறும் தன்மை கூறப்பட்டுள்ளது. பரதந்திர வழிபாட்டு நிலையில் சண்டேசர் சிவாலயங்களில் முன்னர்க் கூறியவாறு பரிவார தேவதைகளில் ஒருவராய்க் கொள்ளப்பெற்று, முதல் திருச்சுற்றில் தனிக் கோயிலில் வைத்து வழிபடப் பெறுவார். இந்நிலையில் இவரது கோயில், சிவலிங்கக் கருவறை—விமான அமைப்பளவிற்கு மிகவும் சிறியதாக அமையும். பரதந்திர நிலையில் சண்டேசர் திருக்கோயில், பிற சிவாலயங்கள் எதனோடும் தொடர்பு படுத்தப்படாமல் தனிக் கோயிலாக, ஊரின் நடுவிலோ, ஊரின் எண் திசைகளில் ஒன்றிலோ அமைக்கப்படும். மூன்றடுக்குக்கள் கொண்ட விமானம்

பொருந்திய கருவறையோடும், பரிவார தெய்வங்களோடும், முன்னர் அமர்நிலை நந்தியோடும் அது ஃமையும். பிற கோயில்களில் உள்ளவாறு, திருச்சுற்றுக்கள் அர்த்த மகா மண்டபங்கள் போல் வன கொண்டமையும் பரதந்திரச் சண்டேசர் ஆலயம், வடக்குத் திசை தவிரப் பிற திசைகளுள் ஒன்றை நோக்கும் வண்ணம் அமைக்கப்படும்.

சண்டேசர் என்னும் பெயர் சண்டேசபதம் எய்திய காரணத்தால் அமைந்த பெயர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. சண்டேச பதம் பற்றிச் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியாரும் பிறரும் விளக்கியுள்ளனர். சண்டேசர் என்பது ஒரு பதவி அல்லது தானம் ஆகும். மேலுமவர் (சி.கே.சு), சிவபெருமான், அம்பிகை, விநாயகர், ஆறுமுகக் கடவுள், சூரியன் ஆகிய இவர்கட்கெல்லாம் அவ்வம் மூர்த்திகளை நெருங்கி அந்தந்த நிலையில் சண்டீச பதம் உண்டு. அவ்வவற்றில் வாழ்பவர்கள் அவ்வம் மூர்த்திகளை வழிபடுவோர்க்கு அவ்வழிபாடுகளின் பயனை அளிப்பர் என்றும், சிவபெருமானுடைய சண்டீச பதத்தில் இந்தக் கற்பத்தில் வாழ்பவர் விசாரசருமனுவார்; இவர் இப்பதவியின் பெயரால் அழைக்கப்படுகின்றார் என்றும், சிவதரிசனம் சண்டீச தரிசனப் பிரார்த்தனையுடன் நிறைவேறுகிறது என்னும், சண்டீசர் கோயிலை அடைந்து வணங்கிக் கைகளை மென்மையாகத் தட்டித் தாம் பெற்ற சிவநின்மாலியப் பிரசாதங்களை அவரிடம் சேர்த்துச் சிவதரிசனப் பலனைத் தரவேண்டுமென்று பிரார்த்தித்து அவர் பாற்பெற்ற விழதியை அணிந்து கொள்ள வேண்டு மென்பது விதி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமானை வழிபட்ட பின் முதல் திருச்சுற்றில் வலம் வருவோர் சண்டீசர் ஆலயத்தை வலமாகச் சுற்றி அவர் முன்வந்து, அவரை வழிபட்ட பிறகு மீண்டும் வந்த வழியே திரும்பிவந்து, வலம்வருதலைத் தொடர்ந்து நிறைவு செய்தல் வேண்டும் என்பதும் கருவறைத் தீர்த்தத் தொட்டிக்கும், சண்டேசுவரர் கோயிலுக்கும் இடையே புகுந்து செல்வதோ, அதன் வழியே சண்டேசுவரர் ஆலயத்தை வலம் வருவதோ கூடாது என்பதும் சிவாலய தரிசன விதிகளாகும். சண்டேசர் தியான நிலையில் எப்போதும் கருவறைப் பெருமானோடு தொடர்பு கொண்டுள்ளாராதலின், தியானம் கெடுமாறு அவர்கட்கிடையே அன்பர்கள் குறுக்கிட்டுச் செல்லலாகாது என்பது நியதி.

சண்டேச பதம் எய்தியோர் திருக்கயிலாயத்தில் சிவ கணத்தின் தலைவராகவும், சிவாலயங்களில் சிவத்தொண்டர்களின் நாயகமாக வும் விளங்கிச் செயற்படு மாற்றைச் சேக்கிழார் நயம்படக் காட்டி யுள்ளார். இங்கிலாந்து தேச வரலாற்றினைப் பயில்வோர், அரண் மனை—பாராளுமன்ற அதிகாரிகள் பற்றிக் குறிப்பிடுங்கால், Lord High Chamber Lain 'Chancellor of Exchequer' என இரு சிறப்பு மிக்க பதவிகள் அமைக்கப்பட்டிருப்பது பற்றி அறிவர் இவ்விரு பதவிகளையும் சண்டேசுவரர் முறையே விண்ணகத்தும், மண்ணகத் தும் ஒருங்கு வகித்து வருபவர் என்று எண்ணுதல் தகும். பாரதி யின் குயில்பாட்டினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆசிரியர் (சேக்கிழாரடிப்பொடி (டி. என். ஆர்) அதன் கண் இடம் பெறும் நந்தி என்பதனை விளக்குகையில். 'Lord High Cham ber Lain' பதவியொரு இணைதநுக் கூறியிருப்பது ஈண்டு உளங் கொளத்தக்கது, சண்டேசபதத்தின் சிறப்பும் முதன்மையும் நோக்கிச், சிவாலயவிழாக்களின்போது பஞ்சமூர்த்திகள் புறப்பாட்டில் சண்டேச மூர்த்தியின் உற்சவத் திருமேனி இடம் பெறும் மரபு தோன்றியது.

சண்டேசரின் அருஞ் செயலைப் பாராட்டு முகத்தான் சிவபெருமான் தேவியொடு, விடை மீதமர்ந்து போந்து, அவரைத் தம் பிள்ளையாராக ஏற்றதோடு, 'அனைத்து நாம் உண்ட்கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டேசனுமாம் பதம் தந்தோம்' என்றுரைத்து (பெ.பு.சண்டி.56) இந்த உயர்பதம் அருளியுள்ளார். 'உனக்காகச் சண்டேசனுமாம் பதம் தந்தோம்' என்னும் திருவாக்கு, உனக்கு ஆகுமாறு சண்டேசன் எனும் பதந்தந்தோம்', என்றும் ''உனக்காகத் தந்தோம்; சண்டேசன் ஆம் பதமும் தந்தோம்' என்றும் கூட்டிப் பொருள் கொள்ளுமாறு அமைந்திருக்கும் அருமைப்பாடு நினைந்தின்புறத் தக்கதாகும். இதனல் பெருமானுக்கு அளிக்கப்பட்ட மலர், மாலை முதலிய நிர்மாலியங்களும், நைவேத்தியங்களும் ஆடை, அணி முதலியன வும் சண்டேசருக்குரிய உடைமையாயின. இது பிறயுகச் சண்டர் களுக்கமையாத தனிச் சிறப்பாகும். அவர்கள் தேவநிலை நின்று சண்டர் நிலை எய்த, சேய்ஞலூர்ப் பிள்ளையார் மானிடநிலை நின்று அந்நிலை எய்தினர். சிவபெருமான் தம் முடிக்கணிந்த கொன்றை மாலையினை எடுத்துப் பிள்ளையாரின் முடியில் சூட்டிய சிறப்புப் பரிசத்தால், பிள்ளையாரின் ஊனுடம்பு ஒளியுடம்பாகி அம்மையப் பரைப் புறக் கண்களாலும் காணும் தகுதியும் தனிச் சிறப்பும்

பெற்று விளங்கினர் என்பதனைச் 'செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனர் அங்கண் மாயை யாக்கையின் மேல் அளவின்னுயர்ந்த சிவமயமாய்ப் பொங்கியெழுந்த் திருவருளின் மூழ்கிப் பூமேல் அயன் முதலாம், துங்க அமரர் துதி செய்யச் சூழ்ந்த ஒளியில் தோன்றினர்' என்று சேக்கிழார் புலப்படுத்தியுள்ளார்.

இதனல் சண்டேசுவரர், சிவாமிசம் பொருந்தி விளங்குபவராகவும் கருதப்படுகின்ருர். அதற்கேற்ப, உண்டகலம் என்பதனைப் பிரமகபாலம் என்றும், உடுப்பன என்பதனைப் புலி, மான் தோல் என்றும், சூடுவன என்பதனைப் பிறை, கொன்றை, கங்கை, பாம்பு என்றும், கி.வா ஜ. அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இதனை உறுதிப் படுத்தும் வகையில், பிள்ளையாரின் அவதாரத் தலமான சேய்ஞலூர்ச் சிவாலயத்தே விளங்கும் சண்டேசச்சிலாமூர்த்தியின் இடச்செவியில் காதோலை அமைய வலச்செவி வடிக்காதாக அமைக்கப்பட்டுள்ளது. தோள் வரை தாழ்ந்த சடைமுடியின்மேல் மண்டையோடு போலும் அமைப்பு பொறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தே அரிதாக அமைந்துள்ள இத்தோற்றம், சண்டேசுவரரின் சிவாமிசச்சாயலை உணர்த்துவதாக உள்ளது. இங்குள்ள சிவாசாரியார், 'இத்தலத்தில் சண்டீசர் சிவாமிசம் கொண்டவராகக் கருதி வணங்கப்படுகின்ருர்' என்னும் மரபுச் செய்தியைக் கூறுகின்ருர். இத்தலத்தே அமர்ந்த கோலத்திலுள்ள சண்டேசுரச் செப்புத் திருமேனி இயல்பான நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

சண்டேசப்பதம் பெற்ற சேய்ஞலூர்ப் பிள்ளையார், அப்பதத்தைப் பெற்ற இடம் சேய்ஞலூருக்கருகிலுள்ள திருவாப்பாடி என்னும் தலமாகும். இதனல் பெருமை மிக்க இத்தலம் அப்பரடிகளின் பதிகம் பெற்ற திருத்தலமுமாகும். தம் தேவாரத்தில் பலவிடங்களில் சண்டீசரைப் போற்றியுள்ள அடிகள் இத்தலப்பதிகத்தின் நான்காம் திருப்பாடலில் சண்டேசானுக் கிரகத்தைச் சுட்டித் 'தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே' என்று போற்றுகின்ருர். இத்தலத்தில், சண்டேசுவரர் கோயில் வழக்கமாக அமையும் இடத்தில் இல்லை. கருவறைக்கு முன்னர் அமைந்துள்ள மகாமண்டபத்துள் அதன் வட புறத்தே, தெற்கு நோக்கிச் சண்டேசமூர்த்தி அமைக்கப்பட்டுள்ளது. பெருமான் (கலிங்கத்திருமேனி) அமைந்துள்ள பீடத்தினும் சற்றே உயரமாக அமைந்துள்ள பீடத்

தின் மீது சண்டேசர் அமைக்கப்பட்டுள்ளார். திருச்சேய்ஞலூர் திருவாப்பாடி ஆகிய இருதலங்களும் பிள்ளையாரின் பிறப்பு, சிவப் பேறு ஆகியவற்றை முறையே எய்திய பெருமைகளைக் கொண்டிருப்பனவாதலால், இத்தலங்களிலுள்ள சண்டேசமூர்த்தம், அமைப்பு ஆகியனவும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன போலும்! அப்பரடிகளின் திருவாக்கால் சண்டீசர், 'தண்டி' எனவும் 'தண்டியார் எனவும் வழங்கப் பெற்றமை புலனாகின்றது. பின்னர் வந்த புலவர் சிலரும் இவரைத் தண்டி எனும் பெயராற் குறிப்பிட்டுள்ளனர்.

நால்வர் வழிபாடு செல்வாக்குப் பெற்ற பின்னர்ச் சிவாலயங்களில் நால்வர் திருமேனிகளையும் சிலை அல்லது செம்பு ஆகிய வற்றில் வடித்துப்போற்றும் மரபு பரவியது. பெரும்பான்மையான சிவாலயங்களில் நால்வர் திருமேனிகளைக் காணலாம். நால்வர் திருமேனிகள் இடம் பெறாத சிவாலயங்களை அரிதாகவே காணக் கூடும். ஆனால், சண்டேசுரர் இல்லாத சிவாலயத்தைக் காண இயலாது. வசதி மிக்க பெரிய சிவாலயங்களில் வழக்கமாக அமையும் சண்டேசர் ஆலயத்தோடு, உற்சவத் திருமேனியும், அறுபத்து மூவர் வரிசையில் சிலை/செப்புத் திருமேனியும், சுவர் அல்லது தூண்களில் அமைக்கப்பட்ட திருமேனியும் அமைந்திருக்கும். கருவறை, திருமதிற் சுவர்கள் ஆகியவற்றிலும், மரத்தேர்களிலும் சண்டேசுரரின் வரலாற்றுக் காட்சிகளிற் சில தொடர் நிலையாக அமைக்கப்பட்டுள்ளன. ஓவியங்களிலும் அக்காட்சிகளை வரையும் வழக்கம் இருந்துள்ளது.

சைவ சமய குரவர்களாகிய நால்வர்க்கும் காலத்தால் முற்பட்டவராகிய சண்டேசனாரின் வரலாறும் சிறப்பும் பற்றிய குறிப்புக்கள் அவர்கள் வழங்கிய தோத்திரப்பனுவல்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. சண்டேசுவரர் தொடர்புடைய சேய்ஞலூருக்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும் திருவாப்பாடிக்கு அப்பரடிகளின் பதிகம் ஒன்றும் ஆக இரு பதிகங்கள் கிடைத்துள்ளன. சித்தாந்த சாத்திர அறிஞர்களும் சண்டேசுரர் வரலாற்றைத் தம் நூலுள் சுட்டிக் கூறியுள்ளனர். திருமுறைகளில் அப்பரடிகளே மிக்க அளவில் (12 இடங்கள்: 48-4; 49-3; 65-6; 73-5; 102-5; 115-4; 183-1; 186-8; 231-10; 247-10, 286-6; 288-9) சண்டேசுவரரைக் குறிப்பிட்டுள்ளார். மேலுமவர் தாம் குறிப்பிட்ட நாயன்மார்களுள் (அப்பூதி, அமர்நீதி, கண்ணப்பர், கணம்புல்லர்,

காரைக்கால், கோச்செங்கணுர், சண்டேசர், சாக்கியர், ஞானசம் பந்தர், நமிநந்தி, தில்லைவாழ் அந்தணர்) சண்டேசுவரரையே மிகுதியான இடங்களில் சுட்டியுள்ளார்.

சண்டேசுரரின் பெருமையை உணரும் வகையில் சாத்திர தோத்திரச் செல்வர்கள் அருளியுள்ள அருண் மொழிகள் சிலவற்றை ஒருங்கு காண்பது பயன் மிகப் பயக்கும். அவை வருமாறு:

தோத்திரம் - திருஞானசம்பந்தர் -

பீரடைந்த பாலதாட்டப் பேணுதவன் தாதை
வேரடைந்து பாய்ந்த தாளை வேர்த்தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் மேயவனே
(1-48–7)

வந்தமண லாலிங்க மண்ணியின் கண் பாலாட்டும்
சிந்தை செய்வோன் தன்கருமம் தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தை தனைச் சாடுதலும் சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே
(1-62-4)

கடிசேர்ந்த போது மலராயின கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிந்தார் சொலக் கேட்டுமன்றே (3-54-7)

அப்பரடிகள் :

அண்டமா ரமரர்கோமான் ஆதியெம் அண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பினலே கூப்பினுன் தாபரத்தைக்
கண்டவன் தாதை பாய்வான் காலற வெறியக் கண்டு
தண்டியார்க்கு அருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே (4-48-4)

தழைத்ததோ ராத்தியின் கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்து கொண்டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதைதாளை பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுத மீந்தார் குறுக்கை வீரட்டனுரே (4-49-3)

நிறைந் மா மணலைக்கூப்பி நேசமோ டாவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக்கண்டு கறுத்ததன் தாதை தாளை
எறிந்த மாணிக்கப் போதே எழில்கொள்சண் டீச னென்னச்
சிறந்த பேரளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே (4-73-5)

சுந்தரர் :

இண்டை மலர் கொண்டு மலர் இலிங்கமது இயற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத் தான்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணி கொண்ட விடங்கனதூர் ... (7-16-3)

மணிவாசகர் :

தீ தில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதை தனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம் 8-15-12)

சேந்தனார் :

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத்தோர்கள் வணங்கப்பொற்கோயிலும் போனக மும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

(திருப்பல்லாண்டு-10)

நக்கீரர் :

வந்தமரர் ஏத்து மடைகூழும் வார்சடைமேல்
கொந்தவிழு மாலை கொடுத்தார் கொல்-வந்தித்து
வாலுகுத்த வண்கயிலைக் கோனார் தம் மாமுடிமேல்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு -(கயிலைபாதி 31)

.........மட்டித்து
வாலுகத்தால் நல்லிலிங்க மாவகுத்து மற்றதன் மேல்
பாலுதுப்பக் கண்டு பதைத்தோடி-மேலுதைத்தங்
கோட்டியவன் தாதை இருதாள் எறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக-நாட்டின் கண்

பொற்கோயில் உள்ளிருத்திப் பூமாலை போனகமும்
நற்கோலம் ஈந்த நலம் போற்றி

-(போற்றித்திருக்கலிவெண்பா-20-22)

பட்டினத்தார் :

இனியவர் இன்னர் அவரை ஒப் பார்பிறர் என்னவொண்ணுத்
தனியவர் தைய லுடனும் அவர் தருமம் புணித்த
முனியவர் ஏறும் உகந்தமுக் கண்ணவர் சண்டி அன்புக்
இனியவர் காய்மழு வாட்படை யார்கச்சி ஏகம்பரே

(ஏகம்ப முடையார் 48)

உமாபதி சிவம் :

வேதமலி சேய்ஞலூர் எச்ச தத்தன் விளங்கியசேய்
மறைபயிலும் விசார சன்மர்
கோதனம் மேய்ப் பவன் கொடுமை பொருது தாமே கொண்டுநிரை
மண்ணியின் தென் கரையின் நீழல்
தாதகியின் மணல் இலிங்கத் தான் பாலாட்டத் தாதைபொரு
தவையிடறும் தாள்கள் மாளக்
காதிமலர்த் தாமமுயர் நாமமுண்ட கலமகனும்
பதமருளாற் கைக் கொண்டாரே

-(திருத்தொண்டர் புராணசாரம்-23)

சாத்திரமும் தோத்திரமும்-திரு முலர் :

உறுவது அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலை பெற்றுனே.

- (திருமந்திரம்-35)

சாத்திரம்-திருக்கடவூர் உய்ய வந்த தேவர் :

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும்-சேதிப்பச்
சண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தன்செயலால் தான் -(திருக்களிற்றுப் படியார்-19)

மேற்காட்டியவற்றுள் உமாபதி சிவத்தின், திருத்தொண்டர் புராண சாரப்பாடல், சேக்கிழார் கூறிய வரலாற்றை ஒரு விருத்தத்தில், சுருங்க அமைத்துக்காட்டிய அருமைத் தோத்திரப் பாடலாகும். அஃதொழிந்த பிற அருட்பாடல்களை நோக்குங்கால், மறையவர் குலத்துதித்த ஒரு பிரமச்சாரி இளைஞன் மண்ணியாற்றங் கரையில் ஆக்களை மேய்த்துக் கொண்டிருந்தபோது, ஆற்று மணலால் இலிங்கத்திருமேனி அமைத்து, அதற்குத் தாம் மேய்த்த பசுக்களில் பாலைப் பெற்று அபிடேகம் செய்தான் என்பதும். இதனை அறிந்த அவன் தந்தை, ஒளிந்திருந்து கண்டு, சினந்து பாய்ந்து பாற்கலங்களைக் காலால் இடறிச் சிவபூசைக்கு இடையூறு விளைத்தான் என்பதும், அதனால் சினமுற்ற சிறுவன் தாதைதாள்களை மழுவினால் எறிந்தான் என்பதும் அப்போது இறைவன் தோன்றி அந்த இளைஞனுக்குப் பொற்கோயில், பானகம், தாமம், மைந்தனும் உரிமை முதலியவற்றை அருளியதோடு சண்டீசன் என்னும் பெயரும் பதமும் நல்கினான் என்பதும் ஆகிய செய்திகளை அறிதல் கூடும்.

இவற்றையும், 'மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்'. என்னும் சுந்தரர் தம் 'திருத்தொண்டத் தொகை' வாக்கையும்,

குலமேறிய சேய் ஞலூரிற் குரிசில் குரைகடல் சூழ்
தலமேறிய விறற் சண்டி கண்டீர் தந்தை தாளிரண்டும்
வலமேறிய மழுவால் எறிந் தீசன் மணிமுடிமேல்
நலமேறிய பால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே' என்னும்

நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடலையும் (22) கொண்டு தெய்வச்சேக்கிழார் அனுபது பாடல்களில் சண்டேசுர நாயனார் புராணத்தை விரிவாகக் கூறியிருப்பது வரலாற்றிலக்கியப் படைப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது சண்டேசுவரர், தங்கள் காலத்திற்கு மிகவும் முற்பட்ட அடியராவார்' என்பதனைத் திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் தம் பாடல்களில் குறிப்பாக உணர்த்தியுள்ளனர். சண்டேசுரரின் காலத் தொன்மையை அப்பரடிகள், 'தாதுமலர் சண்டிக்குக் கொடுத்த நாளோ சகரர்களை மறித்திட்டாட் கொண்டநாளோ, தேசமுமையறிவதற்கு முன்

னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே' – என்னும் திருத் தாண்டகப் பகுதியால் (247-10) உணர்த்துகின்றுர். திருஞான சம்பந்தர்

'கடிசேர்ந்த போது மலராயின கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடிசேர்த்த காலை அறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிந்தார் சொலக் கேட்டுமன்றே
(3-54-7)

என்னும் தேவாரத்தால் இதனை உணர்த்தியுள்ளார். தாதைதாளை தடிந்தசெயல் பண்டு நிகழ்ந்ததென்றும், அதனை அறிந்தார் சொல்லக் கேட்டுணர்ந்தோம் என்னும் ஞானப் பிள்ளையார் சண்டேசரின் காலப்பழமை பற்றிக் கூறுவது சிந்திக்கத்தக்கது. அக்காலம் கி.பி. 7–ஆம் நூற்றுண்டுக்கு முன்னரும், சங்கநூற் காலத்திற்குப் பின்னருமாகிய ஒரு காலப் பகுதியினைச் சேர்ந்தது என்பதனை உய்த்-துணரவைத்துள்ளார்.

(தொடரும்)

# பாவேந்தரின் உரை நடைத்திறம்

## பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

''ஏதோ ஓர் உலகில் இன்புற்று வாழ இந்தப் பிறவியில் இன்ன இன்னச் செய்தல் வேண்டும் என்று 'பாடம்' புகட்டுவதில் நம்பிக்கையற்று, மனிதப்பிறவி ஒவ்வொன்றும் செயல்திறன் கொண்டு தொண்டாற்ற வேண்டும் என்ற புதிய நோக்கை மேற் கொண்ட காலம் முதலாக அறிவோடும், துணிவோடும் எப்படி-யெல்லாம் சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும் என்பதை நுட்பமாக அறிவுறுத்தும்'' (மன்னர் மன்னன், புதுக்கேரித்துப் படையல், மானுடம் போற்று, ப.1) பாவேந்தர் பாரதிதாசனார் தம் சமுதாயப் பணிகளைக் கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், திரைப்படக்கதை, உரைநடை, சொல்லாய்வு என்று பல நிலைகளில் திறம்பட மேற்கொண்டுள்ளார். 'மானுடம் போற்று' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரைத் தொகுதியின் துணைகொண்டு பாவேந்தரின் உரைநடைத் திறனை-கருத்தைப் புலப்படுத்தும் திறன்களில் சிலவற்றை-விளக்கும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

### மானுடம் போற்று

'மானுடம் போற்று' என்ற கட்டுரைத் தொகுதியுள் பாவேந்தர் அவர்கள் சுதேசமித்திரன், புதுவை முரசு, குடியரசு, தமிழரசு, குயில், திராவிட நாடு, குறள்மலர், கலைக்கதிர், நகர தூதன் முதலிய இதழ்களில், புதுவை கே. எஸ். பாரதிதாஸன், கே. எஸ். ஆர்., கே. எஸ்., கிண்டற்காரன, கிறுக்கன், கண்டெழுதுவோன் முதலிய புனைப்பெயர்களில் எழுதிய 73 கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

### கட்டுரைகள்

கட்டுரை என்பது ஒரு சுருக்கமான, ஆனால் கடினமான இலக்கிய வடிவமெனக் கருதப்பெறுகின்றது. ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது ஒரு பொருளின் ஒரு கூறினைப் பற்றிய மிதமான நீளமுள்ளது கட்டுரை என ஆக்சுபோர்டு அகராதி பொருள் தருகின்றது. டாக்டர் ஜான்சன் இது தளர்ந்த மனத்தின் திடீர் வெளிப்பாடு (Loose sally of mind) என விளக்குகிறார். ஸ்டெயின் ஸ்பர்க் உரைநடைக்கலையின் ஒரு படைப்பாக இதைச் சுட்டுவார் கட்டுரை ஒரு தன் வெளிப்பாட்டு இலக்கியம் எனக்கூறும் டபிள்யூ

எச். கட்சன் ஆய்வுக்கட்டுரைகளும் விளக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இதனினின்றும் வேறுபட்டன என்பார். இக்கட்டுரையில் கொள்ளப்பெறாத பொருள் எதுவுமில்லை என்பார் வால்க்கர். கட்டுரை ஒரு சிறந்த இலக்கியப்படைப்பு ஆகும். ஆனால், இதன் விளக்க எளிமை மற்ற இலக்கிய வகைகளைவிடத் தாழ்வானது என்றும், இதைப் படைக்க அதிக திறன் தேவையில்லை என்றும் சிலர் எண்ணுவதற்கு இடமளிக்கின்றது. கார்பே போன்றவர்கள் கட்டுரையானது எளிமை, சுருக்கம், முழுமை ஆகியனவற்றால், அசாதாரண நடைமுறையைக் கொண்டுள்ளது எனக் கருதுவர். செயின்ட் பியூவே இலக்கிய வெளிப்பாடுகளில் மிகக் கடினமானதும் மகிழ்ச்சியளிக்கக்கூடியதும் இதுவே என்றும், இது சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலை வேண்டி நிற்கின்றது என்றும் குறிப்பிடுகின்றார். இச்சிறப்புக்களைக் கொண்ட கட்டுரை என்னும் இலக்கிய வடிவத்தையும் பாவேந்தர் திறம்பட ஆண்டுள்ளார் என்பது குறிப்பிடுதற்குரியது ஆகும்.

## கருத்தைப் புலப்படுத்தும் திறன்

இலக்கியப் படைப்பாளர்கள் தாம் கூற விரும்பும் கருத்துக்கள் கற்போர் உள்ளத்தில் ஆழமாக எளிமையாகப் பதியும் வண்ணம் பல உத்திகளைக் கையாளுவர். பாவேந்தர் எழுதியுள்ள கட்டு-ரைகள், 1. ஒரு பொருள் அல்லது ஒரு பிரச்சனை பற்றிய தன் சிந்தனைகளை வெளிப்படுத்தல், 2. சொற்பொழிவுகளில் அல்லது இதழ்களில் பிறர் வெளிப்படுத்திய கருத்துக்களுக்குப் பதில் அல்லது மறுப்புத் தெரிவித்தல் என்ற நிலைகளில் அமைகின்றன. தமிழ்மொழியின் பெருமை, தற்கால நிலை தமிழர்களின் மனப்போக்கு, தமிழ் மொழியின் முன்னேற்றம், பெண்களின் சமுதாயத் தாழ்நிலை, பெண்ணுரிமை, குழந்தை மண எதிர்ப்பு, விதவை மறுமண ஆதரவு, சாதிவேறுபாடற்ற சமத்துவச் சமுதாயம், பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற நிலை, மூடநம்பிக்கை ஒழிப்பு, சமய நம்பிக்கை மறுப்பு, சுயமரியாதைச் சிந்தனை முதலானவை அவருடைய கடடுரைப் பொருள்களாக அமைகின்றன. இச்சிந்தனைகளை வெளிப்படுத்த பாவேந்தர் கையாண்டுள்ள உத்திகள் சிலவற்றை இனிக்காண்போம்.

## கேள்வி கேட்டல்

ஒரு பொருளை அல்லது பிரச்சனையை எடுத்துக்கொண்டு அது தொடர்பான வினாக்களை எழுப்பிப் படிப்போரைச் சிந்திக்கத்

தூண்டும் திறனை அவர் உரைநடையில் காண முடிகின்றது அதைப் படிக்கும் போது அவர் வெளிப்படுத்த விரும்பும் சிந்தனையே நம் மனத்திலும் எழுகின்றது. எ.கா. இச்சாமிகட்-கெல்லாம் இந்நாள் மட்டும் இந்தியர் செய்துவந்த பூசனைகட்குக் குறைவா ? திருவிழாக்களில் குறைவா? பிள்ளைக்குப் பால் வாங்கிக் கொடுப்பதில் தவறினாலும் இந்தக் கடவுள்கட்குப் பாலால் அபிஷேகம் செய்யாமல் இருந்ததில்லை. இப்படியெல்லாம் இந்தியர் நடத்திவந்திருக்க இந்தியர் மாத்திரம் இன்றைக்கு இக்கதிக்கு உள்ளாவானேன்? மற்ற நாடுகளில் எல்லாம் சுதந்திரத் துவம் பறக்க நம் நாட்டில் மட்டும் அடிமைப்பள்ளம் இருப்பானேன்? நாம் ஒற்றுமையற்றிருப்பானேன்? நாம் காலமெல்லாம் நெல்லிக் காய் மூட்டையாவானேன்? நாம் சிந்தனா சக்தியின்றிச் சொந்த உழைப்பில் நம்பிக்கையின்றிப் பிற நாட்டினர்களால் காறியுமிழப்-படுவானேன் ? நமது கோயிற் கடவுள் இப்படிச் செய்யுமா? செய்யு-மென்றால் அவை கடவுள்களா ? (ப.29) என வினாக்களை அடுக்கி மக்களைச் சிந்திக்கச் செய்து தன் கடவுள் நம்பிக்கை மறுப்புச் சிந்தனையைப் பதியவைக்கின்றார்.

## கேள்வி கேட்டு விடை கூறல்

தான் எழுப்பும் வினாக்களைச் சிந்திக்க மறுப்போர்க்கும், சிந்திக்கச் சோம்பல் கொள்வோர்க்கும் தானே விடையையும் கூறும் போக்கையும் காண்கிறோம். எ,கா. கல்வி கற்பது பணம் சம்பாதிக்க மட்டுமா? அறிவு பெறுவதற்கே கல்வி கற்பது. (ப.16).

## அறிஞர் சிந்தனைகளை மேற்கோள் காட்டல்

தான்கூறும் கருத்துக்கு வலிமையூட்டப் பிற அறிஞர்களின் சிந்தனைகளையும் குறிப்பிடுகின்றார். சமய நம்பிக்கை மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற கருத்துக்களை வலியுறுத்தத் திரு வி க. சுவாமி. வேதாசலம், சத்யேந்திரநாத், ராஜா சர்.டி. மாதவராவ், டாக்டர் சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், சுவாமி தயானந்த சரஸ்வதி, மிஸ். மேயோ, ராவ்பகதூர் எம்.ஸி. ராஜா, ஸ்ரீமதி டாக்டர் முத்துலட்சுமி, ஜே. கிருஷ்ணமூர்த்தி, ராபர்ட் ஜி. இங்கர்சால் (பக். 36–38), பிரிதின்கர், எச்.பி.போனர், ஜீன் மெஸ்லியர், ப்ரட்லா, எஸ். குருசாமி (பக்.109–110) போன்ற அறிஞர்களின் கருத்துக்களைத் தந்துள்ளார்.

## இலக்கிய மேற்கோள் காட்டல்

தம் கருத்துக்களை விளக்க இலக்கிய மேற்கோள்களை எடுத்துக்காட்டும் முறையையும் காண்கின்றோம். எ.கா. சமர்த்தில்லாத ஒருவனைப் பெண்ணுக்கு ஒப்பிட்டுச் சொல்வதை இந்தியாவில் மாத்திரம்தான் கேட்கமுடியும். மற்ற நாட்டினர் பெண்களும் சமர்த்துள்ளவர்கள் என்பதைக் கண்டுகொண்டிருக்கிறார்கள். 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டும் அறிவினிற் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி ''என்னும் பாரதி வாக்கு இங்கு நினைவுக்கு வருகிறது. (ப.17) இதைப் போன்று திருவள்ளுவர், கபிலர், ஒட்டக்கூத்தர், திருத்தக்கதேவர் போன்ற பெருமக்களின் கருத்துக்களைப் பல இடங்களில் எடுத்தாளுகின்றார்.

## சிறு சொற்றொடர்கள்

படிப்பவர் உள்ளம் சலிப்படையாமலிருக்கவும், விறு விறுப்பு எழவும் வேண்டிச் சிறு சிறு சொற்றொடர்களைக் கையாளுகின்றார். எ.கா. இச்சாமிகளிலோ முத்தி கொடுப்பவை உண்டு. சக்தி கொடுப்பவை உண்டு. பாபம் தீர்ப்பவையுண்டு. எதிரிகளை அழிப்பவையுண்டு. கனவில் வந்து போவன உண்டு. எதிரில் வந்து பேசுவன உண்டு கல்லைப் பெண்ணாக்கியவையுண்டு. சூரியனைக் கண்டித்தவையுண்டு. சந்திரனைப் பல் உடைத்தவையுண்டு. உலகத்தையுண்டாகியவையுண்டு. காத்து வருபவையுண்டு.விழுங்குப்வையுண்டு. வேல்பிடித்தவையுண்டு.தண்டாயுதம் பிடித்தவையுண்டு (ப.29) எனப் புராணக் கதைகள் வெறும் மூட நம்பிக்கைகள் என்பதைப் புலப்படுத்துகிறார்.

## எதிர்மறையாகக் கூறல்

எதிர்மறையாகக் கூறித் தான் நினைத்த கருத்தை மக்களிடம் விளங்க வைக்கும் திறனையும் காணலாம். எ.கா. பால்ய மணம் மிக்க நல்லது என்று சொல்லுபவர்களைப் பற்றி நாம் ஒன்றும் பேசமுடியாது. அவர்கள் மிக்க பெரியோர்கள்! தாங்கள் பெற்ற பெண்களிடத்தும் பற்று அற்ற பரம யோகிகள் ப.21), இவ்விடத்தில் குழந்தை மணம் செய்விப்போர்

சமுதாயத்தில் இழிந்தவராகக் கருதத்தக்கவர் என்பதையும் அவர்கள் பொறுப்பற்றவர்களாகவும், உணர்வற்றவர்களாகவும் உள்ளனர் என்பதையும குறிப்பிடுகின்றார்.

## சூழலுக்கேற்ற சொற்றொடரமைப்பு

இரு சாதிப்பிரிவினரிடையே ஏற்பட்ட கலவரத்தைக் குறிப்பிடும் போது ''தடிகள் உபயோகிக்கப்பட்டன. விஷயம் பரவிற்று உள்ளூர்த் தாழ்ந்த ஜாதிக்காரர்களும் அங்கு நெருங்கினார்கள் மேல்ஜாதியாரும் நெருங்கினார்கள். இரண்டு நிமிஷத்தில் இரு பக்கத்திலும் பத்துப்பேர்கள் வீதம் நின்று ஆயுதங்களைச் சுழற்றினார்கள். அடுத்த இரண்டாவது நிமிஷம் நூறுபேர் வீதம் இரு தரப்பிலும் சேர்ந்தார்கள். அதற்கு மேல் உயர் சாதிக்காரருக்குக் கூட்டம் சேரவில்லை. எதிரிகளின் தொகை அதிகப்பட்டுக்-கொண்டே வந்தது. முடிவு : 20 பேருக்கு ஆபத்தான காயம். ஒருவன் இறந்தான். 15 பேருக்குக் கைமுறிவு, கால் முறிவு (பக் 32–33) என்கின்றார். இதைப்படிக்கும்போது முதலில் ஒரு விரைவு உணர்வும், அடுத்துக் கலவர உணர்வும், இறுதியில் அவல உணர்வும் ஏற்படுகின்றமையை உணரலாம்.

## பிற உத்திகள்

முற்கூறியவை தவிரப் பழமொழிகளையும் (ப.41), கதை-சொல்லும் பாங்கினையும் (189), உரையாடல் பாங்கினையும் (216, 250), வெறுப்பை வெளிப்படுத்தும் சொற்களையும் (பக் 22 23, 26, 39, 46, 58, 76, 83 119, 118, 143, 183, 194), விளித்து அறிவுரை கூறும் முறையினையும் (150), உவமை, உருவகங்-களையும் (181, 193) பேச்சு வழக்குச் சொற்களையும் (32, 44, 54, 87, 92) மரபுச் சொற்களையும் (42, 48, 135, 136, 157, 198) வெளியீட்டு முறை உத்திகளாகக் கையாண்டு தன் கருத்தைக் கற்போர் உள்ளத்தில் பதியச் செய்துள்ள திறனை அறிய முடிகின்றது.

இதுகாறுங் கண்டவற்றால் பாவேந்தர் தன் சமுதாய, பொருளாதார மறுமலர்ச்சிச் சிந்தனைகளையும் சுயமரியாதை இயக்கச் சிந்தனைகளையும் மக்கள் மனத்தில் பதியவைப்பதற் காகப் பிற இலக்கிய வகைகளைக் கையாண்டுள்ளமையைப் போல உரைநடை இலக்கியத்தையும் திறம்படக் கையாண்டுள்ளமை புலனாகின்றது.

# வள்ளுவர் வழங்கும்
# மேலாண்மைக் கோட்பாடுகள்

க.சி. அகமுடைநம்பி, பி.இ., எம்.ஏ.,

முன்னுரை :

ஒரு நாட்டின் பண்பாடு, மரபு வழிப்பட்ட பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் போன்றவற்றுக்கு இசைந்ததாகவே அந்த நாட்டின் நிருவாக முறை அமைய வேண்டும் என்பதைப் புகழ்வாய்ந்த நிருவாகிகள் ஒப்புக்கொள்கிறார்கள்.

சப்பான் நாட்டிலுள்ள நிருவாக அமைப்பு முறை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள அமைப்பினின்றும் வேறு-பட்டது. அங்குள்ள நிருவாக முறையில் சமநிலை அலுவலர்களுக்கு இடையில் மட்டுமின்றி, பல்வேறு மட்டங்களிலுள்ள பணியாளர்களுக்கு இடையிலும் தோழமை உணர்வுடன் கூடிய கலந்துரையாடல், ஆலோசனைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், முடிவுகள் காணுதல் போன்ற நிருவாகப் பணிகள்யாவும் இயல்பான முறையில் நடந்தேறுகின்றன. இந்த நடைமுறைகளில் அதிகார ஏற்றத்தாழ்வுகள் குறுக்கிடுவதில்லை.

தனிமனிதனின் உணர்வு நிலைகளுக்கு அந்த நர்ட்டின் நிருவாக முறை மதிப்பளிக்கிறது. உணர்வு வழிப்பட்ட அவர் தம் பண்பாடு குறித்து அவர்கள் பெருமைப்படுகிறார்கள். தனிமனிதக் குண நலன்கள், மதிப்பீட்டுணர்வுகள், நேர்மை பாராட்டுதல், அழகியல் உணர்வுகள், எப்போதும் எளிமை பாராட்டும் இயல்புகள் போன்றவற்றுக்கு சப்பானியர்கள் பெரிதும் மதிப்பளிக்கிறார்கள்.

சப்பானியர் ஒவ்வொருவர் முகத்திலும் உரிமையுணர்வும் உறுதிப்பாடும் பளிச்சிடக் காணலாம். நிருவாக அமைப்பில் ஒருவர் எந்தப் படிநிலையில் இருந்தாலும், எந்தப் பணியை மேற்கொள்பவராக இருந்தாலும், தன்னுடைய பணிகளில் அவர் முழு ஈடுபாடு கொண்டவராக இருப்பதைக் காணலாம். அதனால் தான் சப்பானியர்கள் மிக வேகமாக முன்னேறிச் செல்கிறார்கள்

சப்பானைப் போல் இந்தியாவிலும், இங்குள்ள பல்வேறு இனமக்களின் கூட்டுப் பண்பாடு, நாகரிகம், சீரிய மரபுநிலைகள் மக்களின் வாழ்வு நிலைகள் போன்ற பல கூறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, இங்குள்ள நிருவாக முறையில் மாற்றம் காண வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில், இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் அறுபத்தைந்து சதவிகிதத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இன்றும் இங்கு நிலவுகின்ற கூட்டுக் குடும்ப முறை, சாதியமைப்புகள், பழங்குடி மக்கள் பிரிவுகள், வாழையடி வாழையாகத் தொடர்ந்து வருகின்ற, மக்களின் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் யாவும் நமது நிருவாக முறையில் மாற்றத்தை வலியுறுத்தும் கூறுபாடுகளாம்.

நல்ல நடத்தை, நேரம் தவறாமை, கால அட்டவணைப்படி செயல்படுதல், பணிந்து ஒழுகுதல் (Subordination). ஆதிக்கம் செலுத்துதல் (Superordination) போன்ற அனைத்து நிருவாக நடைமுறைகளும் மக்களின் பண்பாட்டு நிலைகளுக்கு ஏற்பவே அமையக் காண வேண்டும்.

ஆகவே, மேலை நாடுகளிலிருந்து பெற்றுக் கொண்டுள்ள ஒருமுக மைய ஆட்சி (bureaucracy) முறையில் இந்தியாவைப் பொருத்தமட்குல் மாற்றங்கள் சேர்த்தல் தவிர்க்க முடியாத் தேவையாகும். ஆனால் எத்தகு மாற்றங்கள் தேவை என்று முடிவெடுப்பது இன்னும் ஆய்வு நிலையிலேயே இருந்து வருகிறது.

இந்த ஆய்வுக்கு ஒரு முன்னோடியாக-சிந்தனை ஊக்கியாகத் திருவள்ளுவரின் முப்பால் நூல் விளங்குகிறது. மனிதன் வாழ்-வாங்கு வாழ வழிவகை கூறுகின்ற திருக்குறள், மனித வாழ்வின் வெவ்வேறு பகுதிகளையும் செவ்விய முறையில் கருதிப் பார்க்கிறது.

திருவள்ளுவர் ஒரு மெய்ப்பொருள் அறிஞராக இருந்திருக்கலாம். ஆனால், அவர் வழங்கியுள்ள திருக்குறள் மனித வாழ்வின் ஒரு குறிப்பிட்ட வாழ்வுப் புலத்திற்கு மட்டும் உரியதன்று. ஒருவன் ஒருத்தி இணைந்து வாழும் காதல் வாழ்வை அது கிளத்திக்

கூறுகிறது; துறவு வாழ்வையும் சிறப்பித்து உரைக்கிறது. பொருளியில் வாழ்வு பற்றிப் பேசுகிறது; நாடு பற்றியும் நாட்டை ஆளும் மன்னனைப் பற்றியும் விண்டுரைக்கிறது.

வள்ளுவர் வாழ்ந்த காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்து சென்ற வள்ளுவரின் கருத்துரைகள், இன்று அமைந்துள்ள மக்களாட்சி நிருவாக முறைக்கு எப்படிப் பொருந்தும் என்ற வினா எழத்தான் செய்யும், அன்றைய முடியாட்சி முறைக் கருத்துக்கள் இன்றைய குடியாட்சி முறைக்கு ஏற்றதாகுமா என்றும் கேட்கலாம்.

அன்றைய முடியாட்சியின் ஆட்சித்தலைவர் ஒரு குறுநில மன்னராகவோ பெருநிலத்தின் மாமன்னராகவோ இருந்திருப்பார். அவருக்கு இணையான இன்றைய ஆட்சித்தலைவர், ''குடியரசுத் தலைவர் அல்லது பிரதமர் எனப்படுகிறார். அன்றைய மன்னருக் கிருந்த அதிகார எல்லைகள், இன்றைய குடியரசுத்தலைவர் அல்லது பிரதமரை விட அதிகமாக இருந்திருக்கலாம். ஆனாலும் பொது நிருவாகத்தின் தன்மைகள், பொறுப்புகள், கடமைகள் போன்றவை கால ஓட்டத்தால் மாறுவதில்லை. காலத்திற்கேற்ப ஆட்சி முறை மாறலாம்: ஆளுமைக் கோட்பாடுகள் மாறுவதில்லை.

பொது நிருவாகத்தில் கூறுபாடுகளையும் மேலாண்மையின் கோட்பாடுகளையும் திருக்குறள்-பொருட்பாலில் அரசியல், அமைச்சியல் ஆகிய இரண்டு பகுதிகளிலும் வள்ளுவர் சொல்லிச் செல்கிறார்.

பொது நிருவாகத்தில் ஒரு நிருவாகத் தலைவர் எத்தகையவராக இருக்கவேண்டும். தம் சார்புப் பணியாளர்களை எவ்வாறு நடத்தவேண்டும். சார்புப் பணியாளர்கள் மேலலுவலர்களிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பன போன்ற நிருவாக நடைமுறைகளையெல்லாம் பல குறள்கள் அழகாக எடுத்துரைக்கின்றன. மேலும், திட்ட வினைஞர் (executive) பற்றியும், அவருக்கு இருக்கவேண்டிய வினைத் திட்பம், வினையாண்மை போன்ற திறப்பாடுகள் பற்றியும், பணிப் பொறுப்பை ஒப்படைத்தலில் (Delegation) கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் பல குறள்கள் எடுத்துக் கூறுகின்றன.

மனித உளவியல் பற்றி மிக ஆழமாக அறிந்தவர் வள்ளுவர். ஆகவே உளவியல் அடிப்படையில் அவர் கூறுகின்ற ஆளுமை மற்றும் மேலாண்மைக் கோட்பாடுகள் பலவும் இன்றைய ஆட்சியியலுக்கும் மேலாண்மைச் செயல்பாடுகளுக்கும் பொருத்தமானவை மட்டுமின்றி, பெரிதும் பயன் விளைக்கக் கூடியவைகளாகவும் உள்ளன.

## பொது நிருவாக நடைமுறை :

பொது நிருவாகத்தில் மேலலுவலரிடம் சார்நிலை அலுவலர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது ஒரு முக்கிய கூறுபாடாகும். மேலலுவலரை ஒரு சார்நிலை அலுவலர் (Subordinate Officer) எவ்வாறு அணுகவேண்டும்? வள்ளுவர் கூறுகின்ற நுணுக்கமான அணுகுமுறை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்

(குறள் : 691)

(இங்கே வேந்தர் என்பதைத் தலைமை அலுவலர் என்று கொள்ளலாம்)

குளிர்கால மாலைப் பொழுதுகளில், வயல்களில் வேலை செய்யும் விவசாயப் பெருமக்கள், நடுக்கும் குளிரிலிருந்து விடுபட அங்குள்ள மரக்கட்டைகள், இலைகள் சருகுகளைக் குவித்து வைத்து, அதற்குத் தீமூட்டி நெருப்பை உண்டாக்குவார்கள், கொழுந்துவிட்டு எரியும் தழலுக்கு அருகில் அமர்ந்துகொண்டு தீக்காய்வார்கள். அப்போது அவர்கள் வெந்தழலுக்கு நெருக்கமாக இல்லாமலும் அதற்கு மிக அப்பால் சென்றுவிடாமலும் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அமர்ந்திருப்பார்கள். குளிருக்கு அடக்கமாக, தேவையான வெம்மையைப் பெறுவதே அவர்களின் தேவை.

தழலுக்கு மிக அண்மையில் அவர்கள் சென்றுவிட்டால், தீ நாக்குகள் அவர்களைப் பதம் பார்த்துவிடும்; அப்பால் சென்று அமர்ந்தால் குளிரைப் போக்கவல்ல வெம்மை அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும்.

மேல் அலுவலர், இங்கு, வெந்தழலாக உருவகப்படுத்தப் படுகிறார். சார்நிலை அலுவலர்கள் மேல் அலுவலரை மிகவும் நெருங்கிவிடக்கூடாது நெருங்கினால், அவர் தமக்குரிய மரியாதை யைக் கொடுக்கத் தவறுவதாக மேலலுவலர் எண்ணிவிடுவார். தம்மை மதிக்காத ஒரு சார்நிலை அலுவலரை மேல் அலுவலர் என்ன செய்வார் என்பதை விளக்கவேண்டியதில்லை. நெருப்பு சுட்டுவிடும் என்பதே இங்கு நினைவு கூரத்தக்கது.

இதற்கு மாறாக, மேலலுவரைக் கண்டு கொள்ளாமல், அவரது அண்மையைத் தவிர்த்துத் தொலைவிலேயே இருந்து கொள்ளும் ஒரு சார்நிலை அலுவலர் நிருவாகப் பணிகளில் பின் தங்கிவிடுவார். மேல் அலுவலரின் ஒப்புதல் பெறமுடியாமல் அவ ருடைய பணிகள் தேங்கிவிடக் கூடும்; நிருவாக இரத்த ஓட்டம். அவரைப் பொருத்தமட்டில் தேவையான வெம்மை (temperature) இல்லாமல் சுணங்கிவிடும்.

இவ்வாறு மன்னரை முன் நிறுத்திக் கூறப்பட்டுள்ள வள்ளு வரின் அறிவுரைகள் இக்கால நிருவாக வல்லுநர்களும் வியந்து போற்றத்தக்கவை

- மேல் அலுவலர் தனி ஆர்வத்துடன் விரும்புகின்ற பொருள் களைத் தாமும் விரும்பாமல் அமைவது, சார்நிலை அலுவலர் கட்கு ஆக்கம் விளைவிக்கும் (692).

* மேல் அலுவலர் பார்க்கும் நிலையில் ஒரு சார்நிலை அலுவ லர் மற்றொருவரின் காதைக் கடித்துக்கொண்டு இரகசியம் பேசுவதும், நகையாடுவதும் கூடாது. இதுபோன்ற பழக்கங் களைத் தவிர்த்து ஒழுகுவது நல்லது (694).

* மேல் அலுவலரைப் பொறுத்த மறைபொருள் எதையும் உற்றுக் கேட்காமல், அதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று முயற்சி செய்யாமல், அப்பொருளை அவரே சொல்ல நேரும் போது தெரிந்துகொள்ளலாம் என்று அமைவது சாலச் சிறந்தது (695).

இவை போன்று இன்னும் பல உள. மன்னரைச் சேர்ந் தொழுகல் என்ற அதிகாரத்தின் பத்துக்குறள்களும் இக்கால அமைச்சர்கள். அரசுச் செயலர்கள், துறைத் தலைவர்கள், அலு

வலகத் தலைவர்கள், அமைச்சுப்பணியாளர்கள் என்று பல்வேறு படி நிலையில் உள்ள நிருவாக எந்திரத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும், பெரும்பயன் விளைவிக்கின்ற அறிவுக் கருவூலம் என்றே சொல்லிவிடலாம்.

திட்ட வினைஞர்கள் (Executives):

இனி, திட்ட வினைஞர்கள் எத்தன்மையராக இருத்தல் வேண்டும் என்பது குறித்து வள்ளுவர் பலபடக் கூறுகிறார்:

* செயல் உறுதி என்பது அச்செயலைச் செய்கின்றவனின் மன உறுதியே; (Resoluteness in Action) மற்றைய உறுதிகள் யாவும் வேறானவை. (661)

* ஒரு செயலுக்குக் குறுக்காக வருகின்ற இடையூறுகளை அவ்வப்போது அகற்றிவிடுவது; அப்படியும் இடையூறு வந்த அந்தச் செயலைத் தடுத்துவிடும் நிலையில், தளர்ந்துவிடாமல் இருத்தல் ஆகிய இந்த இரண்டின் வழிப்பட்டது வினைத்திட்பம் (662).

* உருளும் பெரிய தேர்க்கு அச்சாணி போன்றவர்கள் உலகில் உள்ளனர். ஆகவே, சிறிய உருவத்தை வைத்து எவரையும் குறைத்து மதித்து, இகழக்கூடாது (667).

* தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
  தூங்காது செய்யும் வினை. (672).

  எந்த ஒரு திட்டச் செயல்பாடுகளிலும், விரைந்து முடிக்க வேண்டிய செயல்கள், காலம் தாழ்த்திச் செய்திட வேண்டிய செயல்கள் என்று (Priority X Posteriority) அமையும் செயல்பாடுகளை வகைப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். பிந்திச் செய்ய வேண்டுவனவற்றை முந்திச் செய்து முடிப்பது பயன் சிறக்காமல் போய்விடும். அதற்காக முதலீடு செய்த பணம் வீணாக முடக்கப்பட்டுவிடும்.

  இந்த இருவேறு செயல்பாடுகளையும், ஒருசேரச் செய்திட வேண்டிய செயல்பாடுகளையும், 'திட்டமதிப்பீடு மற்றும் ஆராய்வுத் தொழில் நுணுக்கம்' என்ற வழிமுறைப்படி தனித் தனியாகப் பட்டியலிட்டு, வகைப்படுத்திக் கொண்டு நிறைவேற்ற வேண்டும்.

* வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. (678)

**இதன் பொருள் :** எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஒரு செயலால் இன்னொரு செயலையும் முடித்துக் கொள்ளுதல், (பழகிய) யானையைக் கொண்டு (பழகாத) மதங்கொண்ட யானையைப் பற்றிக் கொள்வது போன்றது.

ஒரு திட்ட வினைஞரின் செயல் ஆற்றலை நெம்புகோல் ஆற்றல் போலும் (Leverage) அதிகரித்துக் கொள்கின்ற வழிமுறை இது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது பழமொழி.

**இதற்கு ஓர் எடுத்துக்காட்டு :** வயல்களுக்கிடையே பாசன நீரைக் கொண்டு செல்வதற்கு வாய்க்கால் அமைக்கிறார் ஒரு திட்ட வினைஞர் என்று வைத்துக் கொள்வோம். வடிகாலாகவும் அதே வாய்க்கால் பயன்படுவதற்கேற்ற நிலச்சரிவு அங்கு அமைந்திருந்தால், வடிகாலுக்கெனத் தனியாக, ஒரு வாய்க்கால் அமைக்க வேண்டியதில்லை. அமைக்கப்பட்ட பாசன வாய்க்காலையே வடிகாலாகவும் பயன்படுமாறு திட்ட வினைஞர் செய்துவிடுவார்.

## நல்ல நிருவாகி

ஒரு நல்ல நிருவாகி என்ற தகைமைக்கு உரியவர் தம்முடைய சார்நிலை அலுவலர்களிடம் கனிவுடன் கூடிய கண்ணோட்டப் காட்டி இயங்க வேண்டும்.

* கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு. (578)

நம் பொறுப்பில் விடப்பட்ட பணிகள் கெடாமல் (அனைவர் பாலும்) கண்ணோட்டம் உடையவராக இருக்கவல்லவர்க்கு இவ்வுலகம் உரிமையுடையது.

தம்முடைய சார் பணியாளர் ஒருவர் தவறு செய்துவிட்ட நிலையிலும்கூட, பலர் முன்னிலையில் அதனைச் சுட்டிக் காட்டிக் கண்டிப்பதைத் தவிர்த்து, தனியாக அவரை அழைத்து, கண்ணோட்டத்துடன் கண்டித்தால், அந்தச் சார்நிலை அலுவலர் தம் தவறுக்கு வருந்தி, மேலும் அத்தவறைச் செய்யாமல் பணியாற்றிட உறுதி கொள்வார். சிறுமைப்பட்டது போன்ற உணர்வு அவருக்கு ஏற்படாது. இதுவே ஒரு நல்ல நிருவாகியின்

அணுகு முறையாகும். அத்தகு நிருவாகி, தம் நிருவாகப் பரப்புக்கு மட்டுமின்றி, பரந்துபட்ட இந்த உலகுத்கும் கூட உரிமை படைத் தவராவார் என்பார் வள்ளுவர்.

* தவறுகள் செய்துவிடுதல் என்பது மனித இயல்பு. சார்நிலைப் பணியாளர் ஒருவர் செய்யத் தகாத செயல் எதையும் செய்து விட்டால், அவர் தண்டிக்கப்பட வேண்டியவரே, என்றாலும், தண்டிக்கும் வழிமுறையிலும் ஒரு நுணுக்கம் உள்ளது. வள்ளுவர் கூறுவார் —

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர் (562)

தவறான செயல் முறையைக் கண்டுகொள்ளாதவராக எந்த ஒரு மேலலுவலரும் இருத்தல் இயலாது. செய்யப்பட்ட தவற்றின் அளவுக்கு ஏற்பத் தவறு செய்தவரைக் கடுமையாக நோக்க வேண்டும்; எதிர் செயல்-தண்டனை-கடுமையாக இருந்தே தீரும் எனுமாப்போல், ஒழுங்கு நடவடிக்கைகளைத் தொடங்கவும் வேண்டும். ஆயின், தண்டனை வழங்கும் தருணம் வந்துறும் போது, குற்றவாளியான பணியாளர் அதிகமாகப் பாதிப்புறாத-வாறு எளிய தண்டனையை வழங்கி முடித்துக்கொள்ள வேண்டும். அந்த நிலையில், குறிப்பிட்ட அந்தப் பணியாளர் மேலும் அத்தவற்றைச் செய்துவிடாமல் கண்ணும் கருத்துமாகப் பணிபுரிய உறுதிகொள்வார். இதனைக் கண்ணுறும் மற்ற பணியாளர்களும் அந்த மேலலுவலரை மதிப்புடன் கருதுவார்கள். இதனால் மேலலுவலரின் நிருவாக மேலாண்மையும் தலைமையும் மென்-மேலும் நிலைபெற்றதாக ஆகும்.

மாறாக, கடுமையான தண்டனை வழங்கிவிட்டால், அது பணியாளரின் பணியாக்கத்தைப் பாதிப்பதுடன் மற்றப் பணியாளர் களின் உள்ளார்ந்த கண்டனத்தையும் பெற்றதாக ஆகிவிடும். ஆகவே, தம்முடைய ஆக்கம் நெடுங்காலம் நீங்காமலிருக்க வேண்டும் என்று விரும்புகின்ற மேலலுவலர், தவறு செய்தவர், பால் அளவுகடந்து மோதுவது போல் காட்டி, அளவு மீறாமல் முடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

பணிப்பொறுப்புகளை ஒப்படைத்தல்

* பலரும் அறிந்த குறள், பணிப்பொறுப்பை இன்னொருவரிடம் ஒப்படைக்கும்போது, கருதிப் பார்க்க வேண்டுவது,—

இத்தனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அத்தனை அவன்கண் விடல் (517)

* பணிப்பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைக்குமுன் அவருடைய தகுதி. செயல்திறன் போன்ற அனைத்தையும் தெள்ளத் தெளிவுற ஆராய்ந்து கொள்ள வேண்டும். அந்தக் குறிப்பிட்ட பணிக்கு உரியவரைத் தேர்ந்து கொண்ட பின்னர், அவரை அப்பணிக்கு உரியவராக ஆக்கிவிட வேண்டும். (519) உரிமை இல்லாத, அதிகாரம் இல்லாத நிலையில், பொறுப்பை மட்டும் ஒருவரிடம் ஒப்படைத்தால் அவர் எப்படி அதனை நிறைவேற்றமுடியும்?

* தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
நீரா இடும்பை தரும். (510)

பொருள்: ஒருவரை நன்கு ஆராய்ந்து பார்க்காமல் ஒரு பொறுப்பை ஒப்படைப்பதற்கு அவரைத் தேர்வு செய்வதும், ஒருவரை ஒரு பணிக்குத் தேர்வு செய்த பின்னர் அவரை ஐயுறுவதும் நீங்காத துன்பத்தைத் தந்துவிடும்.

* ஆகவே, ஒருவரை நன்கு ஆராய்ந்தே தேர்வு செய்திட வேண்டும். தேர்வு செய்துவிட்ட நிலையில், அவரிடம் எந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்பதைக் கண்டுணர்ந்து அதனை அவர் மேற்கொள்ளுமாறு செய்து அவரை நம்பிக்கையுடன் கையாள வேண்டும். (509)

* அரிய நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்தவரிடத்தும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அவரிடம் அறியாமை இல்லாமலிருப்பது அரியதாகும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட பணிப் பொறுப்பை ஏற்கும் தகுதி அவரிடம் உள்ளனவா என்பதை சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். (503) ஏனெனில்,

*

எனை வகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர் (514)

முடிப்புரை:

இவ்வாறு நிருவாக, மேலாண்மைக்குரிய வள்ளுவரின் வழிமுறைகளை எழுதிக்கொண்டே போகலாம். நிருவாகத் திறன் மேம்படுவதற்கும், மேலாண்மை சீராண்மையாய்ச் சிறந்து விளங்குவதற்கும் தேவையான அறிவுரைகளைக் கொண்டுள்ள குறள்கள் நூற்றுக்கு மேல் உள்ளன.

ஒரு நாட்டின் ஆட்சியியல் ஏன் சீர்குலைகிறது, பொய்மையும் போலிமையும், ஊழல் நடைமுறைகளும் நாட்டு மக்களிடையே ஏன் ஊடுருவுகின்றன. என்றெல்லாம் கூட வள்ளுவர் கருதிப் பார்த்திருக்கிறார்.

உழைப்புக்கு உரிய மதிப்பீட்டை ஒரு நாட்டுத் தலைமை அளிக்கத் தவறினால், அந்த நாடு பொய்மையுள் வீழ்ந்துவிடும் என்பார் வள்ளுவர். மனித உழைப்புக்கு மிக உயர்ந்த இடத்தைத் தருகிறார் வள்ளுவர். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்று ஆணித்தரமாக அறிவுறுத்துகிறார் சுவாமி விவேகாநந்தரும் உழைப்பின் உயர்வை வள்ளுவர் போல் உரைத்து ஒலிப்பார் உழைப்பை விட உயர்ந்தது எது என்ற வினாவை அவர் எழுப்புவார், அதற்கு அவரே விடையளிப்பார். உழைப்பை விட உயர்ந்தது அதிக உழைப்பே என்றவாறு அவருடைய பதில் உரை அமையும்.

ஒரு நாட்டில் ஊழல் ஏன், எப்படி ஏற்படுகிறது? அரசியலாளர்களே காரணம் என்பர் சிலர். இல்லை, இல்லை அரசு அலுவலர்களே காரணம் என்பர் இன்னும் சிலர். வள்ளுவர் கூற்று எதுவாக இருக்கும்?

தொழில் செய்கின்ற தொழிலாளர்கள், வினைஞர்கள் எனப் படுவோர் மனக் கோட்டம் இல்லாமல், ''நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை'' யோடு இருக்கும்வரை உலகம் கெடாது என்கிறார் வள்ளுவர். வினைஞர்கள் கோணல் உற்றால், உலகமே கோணிவிடும்: கெட்டுவிடும். ஆகவே, ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பில் உள்ளவன், உழைப்பாளிகளைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பது வள்ளுவர் விடுக்கும் கட்டளையாகும்.

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு (520)

இதுபோன்று, வள்ளுவர் காட்டும் நெறிமுறைகளை, நம்முடைய நிருவாக முறையில் மாற்றங்கள் செய்திட முனையும் போது கருத்தில் கொண்டு ஆய்வு செய்வது பயன் விளைக்கும். வள்ளுவரின் மேலாண்மையைப் பள்ளி, கல்லூரிகளில் கற்பிக்க ஏற்பாடு செய்வது இன்றைய நிருவாகத் தேவையாகும்.

———

# இலக்கியத்தில் சிந்தனை ஒற்றுமை

பேரறிஞர் செ.வை. சண்முகம்

சிந்தனை ஒற்றுமை ஒத்த இருவரிடத்திலேயே உண்டாகும். அவர்கள் கற்றவராகவும் இருக்கலாம், கல்லாதவறாகவும் இருக்கலாம். ஆனால், அவாகளுக்குள் கல்வி, அறிவு, அனுபவம் ஆகியவை ஒத்திருப்பதோடு சமூகப் பண்பாடு, குடும்பப் பின்னணி போன்றவையும் ஒத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட இருவரிடத்தில் ஏற்படும் சிந்தனை ஒற்றுமை நெருங்கிப் பழகியவருக்கு மட்டுமே தெரியவரும்; பிறருக்குத் தெரியாது. ஆனால் படைப்பு ஆசிரியர்களிடையே காணப்படும் சிந்தனை ஒற்றுமை அவர்கள் படைப்பு மூலம் வெளிப்படுவதால் என்றும் நிலைத்திருப்பதோடு பலரும் அறிந்து கொள்ளவும் முடிகிறது. ஆகவே இலங்கியங்களில் காணப்படும் சிந்தனை ஒற்றுமை ஆராய்ச்சிப் பொருளாகவும் அமைந்து விடுகிறது.

ஒருமொழி பேசும் இரு வேறுகால கட்டங்களில் வாழ்ந்த இரண்டு இலக்கியவாதிகளிடையே சிந்தனை ஒற்றுமை காணப்படும். இது இலக்கிய ஆராய்ச்சியில் இலக்கிய வரலாற்று ஆராய்சியின் ஒருபகுதியாகக் கருதப்படுகிறது. இது எப்படி ஒரு புலவன் தனக்கு முன்னால் வாழ்ந்த புலவர்களுக்குக் கடன் பட்டிருக்கிறான்; முற்காலப் புலவர்கள் கருத்துகளிலிருந்து மாறுபட்டுத் தனித் தன்மையைப் புலப்படுத்தியுள்ளான் என்றெல்லாம் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் அறிந்தே புலவனின் தனிச் சிறப்பை வெளிப்படுத்துவார்கள்.

இங்குப் பொதுவாக ஒன்று குறிப்பிடத் தகுந்தது. வேற்றுமை இல்லாமல் ஒற்றுமை இருக்க முடியாது. எனவே வேற்றுமையில் ஒற்றுமையும், ஒற்றுமையில் வேற்றுமையும் இருக்கத்தான் செய்யும். ஆகவே ஒற்றுமையும் வேற்றுமையும் சேர்ந்தே ஆராயவேண்டும்; விளக்க வேண்டும்.

சிந்தனை ஒற்றுமை வேறுபல ஒற்றுமைகளின் அடிப்படையிலேதான் அமைகிறது. இதனால் முன்னர் வாழ்ந்த எல்லாப் புலவர்களையும் ஓர் இலக்கியப் புலவன் பின்பற்றமாட்டான்; கருத்தைத் தழுவமாட்டான். மேலும் சிந்தனையில் முழு ஒற்றுமையும் பார்க்க முடியாது.

நற்றிணைப் பாடல் ஒன்றில்,

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்

என்று கூறப்பட்ட கருத்தே,

பெயக் கண்டு நஞ்சுண்டு அடைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்ற திருக்குறளிலும் காணப்படுகிறது. அதாவது; ஒற்றிணைப் பாடலுக்கும் குறளுக்கும் சிந்தனை ஒற்றுமை காணப்படுகிறது. இரண்டு நூல்களும், நண்பர்கள் வேண்டியவர்கள் நஞ்சைக் கொடுத்தாலும் குடிப்பதே நாகரிகம்-பண்பாடு என்று கூறுகின்றன. இந்தக் கருத்து ஒற்றுமைக்கு ஏற்ப நஞ்சு, உண்ணல், நாகரிகம் ஆகிய மூன்று சொற்களும் கூட இரண்டு நூல்களிலும் பொது-வாகக் காணப்படுகின்றன. அதாவத, சிந்தனை ஒற்றுமை கருத்து ஒற்றுமையாகவும் சொல் ஒற்றுமையாகவும் வெளிப்பட்டுள்ளது அதே சமயத்தில் இந்த ஒற்றுமைக்கு இடையே வேற்றுமை, இல்லாமல் போகவில்லை.

முன்னர் இருப்பது, நண்பர் கொடுப்பது. நஞ்சு குடிப்பது நாகரிகம் ஆவது ஆகிய நான்கு செய்திகள் ஒற்றிணையிலும், நஞ்சும் ஊற்றுவதைப் பார்ப்பது, அதைக் குடிப்பது, நாகரிகமானது. ஆகிய மூன்று செய்திகள் குறளிலும் கூறப்பட்டிருக்கின்றன. எனவே நஞ்சு குடிப்பது, நாகரிகம் ஆவது என்ற இரண்டு செய்திகளே நற்றிணைக்கும் குறளுக்கும் பொதுவாக உள்ளன.முன்னர் இருப்பது, நண்பர் கொடுப்பது என்ற இரண்டு செய்திகளும் திருக்குறளில் காணப்படவில்லை. ஆனாலும், நஞ்சு ஊற்றுவதைப் பார்ப்பது என்ற செய்தியிலே அந்த இரண்டு செய்திகளும் அடங்கியுள்ளன

இச்சிந்தனை ஒற்றுமை எப்படி ஏற்பட்டது நற்றிணைப் பாடல் தோன்றிய பிறகு திருக்குறள் எழுதப்பட்டதா? திருக்குறள் தோன்றிய பின்னர் நற்றிணைப் பாடல் எழுந்ததா? எது எவ்வாறா யினும் இவ்விரு பெரும் புலவரிடையே இச்சிந்தனை ஒருமைப்பாடு அமைந்துள்ளமை காணலாம்.

இப்படி ஒரு மொழியிலுள்ள இலக்கியங்களுக்குள் பின்னால் தோன்றிய இலக்கியங்களில் முன்னுள்ள இலக்கியங்களின் கருத்து காணப்படுவது அந்த நூல்களின் செல்வாக்கு என்று கருதப்படு கிறது. ஒருவன், எவ்வளவுதான் இயற்கையில் ஆற்றல் படைத்த்

வனாக இருந்தாலும், தன்னுடைய முன்னோர்களுடைய நூல்களைப் படிக்காமல் இருக்கமாட்டான். அதனால் முன்னால் உள்ள இலக்கியங்களின் சிந்தனை,சொல் அவனைப் பாதிக்காமல் இராது.

தமிழ்ப் புலவர்களுள் கம்பரே கல்வியில் சிறந்தவராகக் கருதப்படுகிறார், எனவே, கம்பராமாயணத்தில் அதற்கு முன்னால் எழுந்த இலக்கியங்களின் செல்வாக்கும் சிந்தனையின் தாக்கமும் ஏற்பட்டுள்ளமை காணலாம். கம்பராமாயணத்தை, கம்பர் வாழ்ந்த காலத்திலேயே படித்த ஒருவர், அது சீவகசிந்தாமணியோடு ஒற்றுமை இருப்பதாகக் கம்பரிடம் சுட்டிக் காட்டியதாகவும், அதற்கு அவர் சீவக சிந்தாமணியிலிருந்து ஓர் அகப்பை எடுத்துக் கொண்டுள்ளேன் என்று கூறியதாகவும் செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. இது முன் நூல்களின் தாக்கத்தைப் புலவர்களே ஒத்துக் கொள்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். இதனால் தான் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் ஓர் ஆசிரியர் தனக்கு முன்னர் வாழ்ந்த ஆசிரியர்களின் கருத்துக்களை எப்படியெல்லாம் தன்னுடைய நூலில் எடுத்து கையாண்டிருக்கிறார் என்பதை வரலாற்று ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக மேற்கொண்டு வருகிறார்கள். இந்தக் கருத்தை இலக்கண ஆசியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதற்கு நன்னூலே சான்று.

> ''முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும்
> பொன்னே போல் போற்றுவம் என்பதற்கு முன்னோரின்
> வேறுநூல் செய்தும் எனும் மேற்கோள் இல் என்பதற்கு
> கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்''

என்ற நன்னூல் சூத்திரம் இதைப் பொதுமைப்படுத்திக் கூறி விட்டது. இங்குச் சொல்லும், பொருளும் ஒத்திருப்பதற்கு முன்னோரின் நூல்களே காரணம் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மொழி இலக்கியங்களுக்குள் மட்டுமல்லாமல் இரண்டு வேறுபட்ட மொழி இலக்கியங்களுக்கு இடையேயும் சிந்தனை ஒற்றுமை காணப்படலாம். இதில் பல வகை உண்டு. ஒன்று மொழி பெயர்ப்பு, ஒரு மொழி நூலை இன்னொரு மொழியில் மொழி பெயர்ப்பது. மற்றொன்று ஒரு மொழி நூலைத் தழுவி இன்னொரு மொழியில் புது நூலாகவே படைப்பது, இது

மொழியாக்கம். தமிழிலுள்ள உமர்கய்யாம் பாடல்கள் மொழி பெயர்ப்பு நூல்; கம்பராமாயணம் மொழியாக்க நூல்.

மொழிபெயர்ப்பு நூல்களிலும் மூலநூலின் கருத்துக்கும் மொழி பெயர்த்த நூலின் கருத்துக்கும், முழு ஒற்றுமை பார்க்க முடியாது. மொழி பெயர்த்தவர் சிறந்த படைப்பாளியாக இருந்தால், தன்னுடைய மொழியின் மரபுக்கும், பண்பாட்டுக்கும் ஏற்ப ஓரளவு மாற்றியோ, திருத்தியோ மொழி பெயர்ப்பார். உமர்கய்யாம் பாடல்களை மொழி பெயர்த்த நாஞ்சில் நாட்டுக் கவிஞரான தேசிக விநாயகம் பிள்ளை பல மாற்றங்களைச் செய்துள்ளார்.

''வெயிலுக்கு ஏற்ற நிழல் உண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவி யுண்டு
கலசம் நிறைய மது உண்டு''

என்ற பாடலில் உமர்கய்யாம் மூல நூலில் A book of verse in the hand என்று பொதுப் படையாக இருப்பதையே தேசிக விநாயகம் பிள்ளை, கையில் கம்பன் கவி உண்டு என்று மொழி பெயர்த்துள்ளார். எனவே மொழிபெயர்ப்பு நூலிலும் ஒற்றுமையும், வேற்றுமையும் உண்டு.

வான்மீகி இராமாயணத்தைத்தான் கம்பர் தமிழில் இராம காதையாகப் படைத்துள்ளார். எனவே இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு நூல்களுக்கு இடையே ஒற்றுமையும் வேற்று -மையும் தெளிவாகப் புலப்படும்.

''தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவினான் உரையின்படி நான் தமிழ்ப்
பாவினான் இது உணர்த்திய பண்பரோ.''

என்று கம்பரே கூறுவதால் இரண்டு இலக்கியத்துக்கும் உள்ள ஒற்றுமை வெளிப்படை. ஆனால் அவரே

''பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர்சொன்னவும் பன்னப் பெறுவோ.''

புதுமையாகப் பாடுவதையும் உணர்த்துவதாக இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் விளக்குகிறார்கள். இது கம்பருடைய தனித்தன்மையை வான்மீகத்திலிருந்து வேறுபடுவதையே புலப்படுத்துகிறது.

இரண்டு நூல்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வெளிப்படை. எனவே வேற்றுமையை மட்டும் கோடிட்டுக் காட்டுவோம்.

இராமனும், சீதையும் திருமணத்துக்கு முன்னரே இராமன் சீதையை மணப்பதற்காகச் சிவதனுசை ஒடிப்பதற்கு முன்னரே இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் காதல் கொண்டு விட்டதாகக் கம்பர் பாடியுள்ளார். இராமன் வில்லை ஒடிப்பதற்காக மிதிலை நகரத்தின் வீதி வழியாகச் செல்லும் போது எதிர் பாராமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் காதலிக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதை,

''அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்''
''வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிபுக்கு இதயம் எய்தினார்''

என்று கம்பர் அவர்களின் காதலைப் புதுமையாக விளக்கி யுள்ளார். இதற்குக் காரணம் என்ன? தமிழ் இலக்கிய மரபில் தலைவனும், தலைவியும், 'பாலது ஆணைபால் எதிர்ப்பட்டு' ஒருவரை ஒருவர் அறிந்து, காதலித்து, களவொழுக்கத்தில் ஈடுபட்ட பிறகே திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையை-கற்பு வாழ்க்கையை-மேற்கொள்ளுவார்கள். எனவே கம்பர் புகுத்திய புதுமை - வான்மீகத்திலிருந்து வேறுபாடு - தமிழ்ப் பண்பாட்டின், மரபின் தாக்கத்தினால் உண்டானது ஆகும். சில சில வேற்றுமைகள் அவருடைய இலட்சிய கனவினால் ஏற்பட்டவை. கம்பருடைய நாட்டு வருணனைக்கும், நகர வருணனைக்கும், வான்மீகியினுடைய நாட்டு வருணனைக்கும், நகர வருணனைக்கும் உள்ள வேறுபாடு கம்பருடைய நாடு, நகரம் பற்றிய இலட்சியத்தை ஒட்டியது.

மொழி பெயர்ப்பிலும், மொழியாக்கத்திலும் இலக்கியங்களுக்கு இடையே காணப்படும் சிந்தனை ஒற்றுமை-வேற்றுமை -பாண்பாட்டு ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக அமையும்

இரண்டு வேறு மொழி இலக்கியங்களுக்கு இடையே எந்த வித வரலாற்றுக் காரணமும் இல்லாமல் காணப்படும் சிந்தனை ஒற்றுமை மூன்றாம் வகையாகும். பொதுவாகச் சான்றோர்கள் எங்குப் பிறந்தாலும் ஒரே விதமாகச் சிந்திப்பார்கள் மனித உணர்வின் இன்றியமையாத கூறுகள் பெரிய மாற்றம் பெறாமல் உலகு எங்கிலும் நின்று நிலவுகின்றன. மேலும், மனித சமுதாயத்தின் மொத்த வளர்ச்சியிலும், மாற்றத்திலும் பொதுமைப் பண்பு நிலவுவதால் அதன் அனுபவ எண்ண வெளியீடான இலக்கியத்திலும் சிந்தனை ஒற்றுமை காணமுடிகிறது. என்று இலக்கிய ஆய்வாளர்கள் விளக்குகிறார்கள் இப்படிப்பட்ட சிந்தனை ஒற்றுமை ஆராய்ச்சியே ஒப்பிலக்கியம் என்ற புது ஆராய்ச்சித் துறையைத் தோற்றுவித்துள்ளது.

"தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றி
எம்மை இகழ்ந்த வினைப் பயத்தால்-உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்''

என்ற நாலடியார் பாடலைப் படிப்பவர்களுக்கு விவிலியத்தில் பயிற்சி இருந்தால்,

Father, forgive them; for, they do not know what they do என்ற விவிலிய வாசகம் நினைவுக்கு வரும். பிதாவே, அவர்களை மன்னித்தருளும்; ஏனெனில், அவர்கள் தாங்கள் செய்வது இன்னது என்று அறியாதிருக்கிறார்கள் என்பதே இதன் பொருள். நாலடியாரும் விவிலியமும் தனக்குத் துன்பம் செய்பவர்களிடத்தும், அவ்வாறு துன்பம் செய்வதால் அவர்கள் துன்பம் அனுபவிக்கப் போகிறார்களே என்று, இரக்கப்படும் இயல்பினை வெளிப்படுத்துகின்றன இயேசு நாதர் தன்னைச் சிலுவையில் அறைவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பவர்களைப் பார்த்தே அவ்வாறு கூறினார் என்றால், அங்கு அவருடைய அருள் உள்ளமே வெளிப்படுகிறது. எனவே, இந்தச் சிந்தனை ஒற்றுமை அருளாளர்களின் இரக்க மனப்பான்மை எங்கும் ஒன்றாக இருப்பதனால் ஏற்பட்டது.

கம்பராமாயணத்துக்கும் மில்ட்டன் (Milton) என்ற ஆங்கிலக் கவிஞன் எழுதிய சுவர்க்க நீக்கம் (Paradise lost) என்ற

காப்பியத்துக்கும் இடையே சிந்தனை ஒற்றுமை-வேற்றுமை -இருப்பதை ஒப்பிலக்கிய ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்க் கவி; மில்டன் இங்கிலாந்து நாட்டில் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக் கவி. இருவருக்கும் எந்த விதத் தொடர்புல் இல்லை. எனினும் அவர்கள் இருவருக்கும் இடையே சிந்தனை ஒற்றுமையும் ஒற்றுமையில் வேற்றுமையும் இருப்பதை அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். கம்பரின் இராவணனுக்கும் மில்டனின் சாத்தானுக்கும் ஒற்றுமை உண்டு; கம்பருடைய கோசலநாட்டு வருணனைக்கும் மில்டனுடைய, ஆதாம்-ஏவாள் வாழும் ஈடன் சோலை வருணனைக்கும் ஒற்றுமை காணப் படுகிறது. அனுமன் இலங்கைக்குள் சென்று சீதையைப் பார்த்துத் திரும்பும் போது இலங்கைக்குத் தீ வைத்து விட்டு வருகிறான். அதற்காக இராவணன் மந்திர ஆலோசனை நடத்துகிறான். அதுபோலவே சுவர்க்க நீக்கத்தில் சாத்தான் செய்யும். "பாண்டிய மோனிய'' விவாதம் கம்பருடைய வருணனையோடு ஒர்றுமை உடையதாக இருக்கிறது. இந்தச் சிந்தனை ஒற்றுமை ஆராய்ச்சி இலக்கிய இன்பம் தருவதோடு, மானிட ஆற்றலின் ஒற்றுமையையும் உயர்வையும் வெளிப்படுத்துகின்றது.

இரு மொழிப் புலவர்களிடையே இன்னொரு வகையாலும் சிந்தனை ஒற்றுமை காணமுடியும். இது ஒரளவு முதல் வகையை ஒத்தது என்றாலும், ஒப்பிலக்கியத்தின் ஒரு பகுதியாகவே அறிஞர்களால் கருதப்படுகிறது.

பாரதியின் கவிதைகளுக்கும் செல்லியின் பாடல்களுக்கும் இடையே சிந்தனை ஒற்றுமை கருத்திலும் கற்பனையிலும், உவமையிலும், உருவகத்திலும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் பாரதி செல்லியின் நூல்களைப் படித்து சுவைத்தது தான். பாரதியே, ஓர் இலக்கிய புலவனின் தாக்கம் மற்றொரு புலவனுக்கு ஏற்படும் விதத்தை விளக்கியுள்ளார். 'மற்ற மனிதர் -களுக்குக் கவிகளால் எத்தனை சுவை கிடைக்கிறதோ, அத்தனை புதிய சுவை கவிஞருக்கு அவ் வால்மீகி முதலியவர்களிடம் கிடைக்கிறது' என்று குறிப்பிட்டுக் கூறினாலும் இது எல்லாப் புலவர்களுக்கும் பொருந்துவது தான். இப்படியே பாரதி செல்லியைப் படித்துத் தன் வயப்படுத்தி நம் நாட்டுப் பண்புக்கும் மரபுக்கும் தன்னுடைய கோட்பாட்டுக்கும் பல புதிய பாடல்களை

இயற்றியுள்ளதே இருவருக்கும் சிந்தனை ஒற்றுமை ஏற்படக் காரணம்.

சிந்தனை ஒற்றுமை சிறுகதை இலக்கியத்திலும் புதின இலக்கியத்திலும் காணலாம். ஓர் இளைஞனுக்கும் வயது முதிர்ந்த மூதாட்டிக்கும் உள்ள இரகசியத் தொடர்பு பற்றிய மு. வ. வின் மலர் விழி என்ற புதினத்தில் கரு. சாமர்செட் மாம் எழுதிய திருமதி. மேடாக் (Mrs. Mad doch) என்ற புதினத்தின் கருவோடு ஒற்றுமை உடையது. இதைப் போலவே தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' என்ற புதினமும் மாப்பகான் பிரெஞ்சு மொழியில் எழுதிய 'அண்ணனும் தம்பியும்' என்ற புதினமும் கதைக் கருவிலும், நிகழ்ச்சிப் பின்னலிலும் பாத்திரங்களின் குண இயல்புகளிலும் ஒற்றுமை உடையன.

இலக்கியத்தில் சிந்தனை ஒற்றுமையை அறிவது வாழ்க்கை -யிலும் நம்முடன் வாழும் மக்களுடைய சிந்தனை ஒற்றுமையைத் தெரிந்து கொள்ளத் தூண்டு கோலாக இருக்கும். மனிதர் சாதி, சமயம், மொழி, நாடு ஆகியவற்றால் வேறுபட்டாலும், அவர் களுக்கிடையே சிந்தனை ஒற்றுமை இருக்க முடியும் சிந்தனை ஒற்றுமை இருக்கிறது என்பதையே இலக்கியங்கள் தெளிவுபடுத்து கின்றன. அதனால் தான் திருவள்ளுவரும் மானிட வாழ்க்கைக் கோட்பாடுகளில் ஒன்றாக 'ஒப்புரவு அறிதல்' என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

> ''ஒத்தது அறிவான் தான் உயிர்வாழ்வான் மற்றையான்
> செத்தாருள் வைக்கப்படும்.''

என்ற குறள் நம்மோடு வாழும் மக்களிடையே ஒற்றுமை காணவேண்டும் என்று வற்புறுத்தினாலும், அது இலக்கியத்துக் கும் பொருந்துவதாகக் கொள்ளலாம்.

# திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்த்து

பாடியவர் : இராசகுமார் காசிநாத துரை

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
மதுரைத்தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர்)

ஆறுமுக நாவலர் அன்றுகதிர் காமம் விட்டாகாய
மார்க்கமாக அவன் உலகைக் கண்டதைப் போல்

ஆறுமுக பூசைசெய் வாரியார் வானூர்தி அகன்றின்று
அழைத்திட அவனுலகு சென்றடைந்தார்

கூறுமடி யார்புகழ் கூறியவர் சொற்களைக்
கும்பிட்டுப் பின்பற்றிக் குமரனை நோக்கி வாழ்வாம்

ஆறுதலை எல்லோரும் இன்புறுவர் ஐயமிலை
ஆறெழுத் தாறெழுத் தாறெழுத்துக் கிருபானந்தமே!